
# வைத்தீசுவரம்



## காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்

பண்டிதர் கலாநிதி க.வைத்தீசுவரக்குருக்கள்

## நினைவுமலர்

உ

சிவமயம்



அமரர் கலாநிதி.

கணபதீஸ்வரக்குருக்கள் வைத்தீசுவரக்குருக்கள்

(ஈழத்துச் சிதம்பரம், காரைநகர்.)

# வைத்தீசுவரம்

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் ஆலமர வேராக நின்று
அவனியில் நற்புகழுடன் வாழ்ந்து
தன்னையே மெழுகுவர்த்தியாக உருக்கி
ஊற்றி எம் வாழ்விற்கு
ஒளியேற்றிய எம் தெய்வமே
இன்று எம்மை இப் புவியில் அநாதரவாய்த்
தவிக்க விட்டு இறையடி சேர்ந்த
எங்கள் அன்புத் தெய்வமே
எங்கள் கண்ணீரும், கவலைகளும்
ஒன்றாக இணைந்த நிலையில்
இந்த அன்பு இதழைத்
தங்கள் திருவடிக்குச் சமர்ப்பித்து
வணங்குகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

உ
சிவமயம்



ஈழத்துச்சிதம்பர நடராஜப்பெருமானும் அம்பிகையும்



வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய் யானும் அதுவே வேண்டின் அல்லால்,
வேண்டும் பரிசொன்றுண்டென்னில் அதுவும் உன்தன் விருப்பன்றே.

உ
சிவமயம்



இவ்வுலகில்
22.09.1916

இறையுலகில்
25.04.2015


அமரர்

# கணபதீஸ்வரக்குருக்கள் வைத்தீசுவரக்குருக்கள்


அவர்கள்

## திதி வெண்பா

மன்மதத்துச் சித்திரையில் மாசில்லாப் பூர்வசப்தம்
பொன்பாதம் தேடியநற் பூசுரராம் - நன்னேராய்
ஈழத்துச் சிதம்பரனார் இன்னடிகள் போற்றி செய்தே
வாழ்ந்திடுவார் வைத்தீஸ் வரர்



யோகர் சுவாமிகள்



மகாவித்துவான் சி. கணேசையர்

உ
சிவமயம்



# தோத்திரப்பாடல்கள்

## திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

பிடியதனுருவுமை கொளமிகு கரியது

வடிகொடு தனதடி வழிபடுமவரிடர்

கடி கணபதிவர அருளினன் மிகுகொடை

வடிவினர் பயில் வலி வலமுறை இறையே

### திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே

அன்பினில் விளைந்தஆ ரமுதே

பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்

புழுத்தலைப் புலையனேன் றனக்குச்

செம்மையே ஆய சிவபதம் அளித்த

செல்வமே சிவபெரு மானே

இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்

எங்கெழுந் தருளுவ தினியே.

### திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே

ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை

கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்

செய்யாயோ அருள்? கோடைத் திரை லோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றப்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் - குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் - தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் - குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப்- பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

## திருச்சிற்றம்பலம்



# வம்ச வரலாறு

திரு உத்தரகோசமங்கையென்னுந் திருத்தலத்திருலிந்து மாங்களேஸ்வர சுவாமிக்கு இப்போ பூசை செய்கிறவர்கள் முப்பத்திரண்டு குருமார்கள். இந்த முப்பத்திரண்டு குருக்கள்மாருக்கும் சோமசுந்தர சேதுபதி மகாராசாவாகிய என்னால் குருக்கள்மார் முப்பத்திரண்டு பேருக்கும் ஒவ்வொரு செப்புப் பட்டயம் கொடுக்கப்படுகிறது. செப்புப்பட்டயத்திலெழுதப்படுகிற விஷயம் என்னவானால்.

**மங்களேசுவரர் துணை**

கலியப்தம் நாலாயிரத்து நானூறு. சாலிவாகன சகாப்தம் ஆயிரத்திருநூற்றைம்பத்தொன்று, பிரபவாதி வருஷம் முப்பத்திரண்டாவது விளம்பி வருஷம் சித்திரை மாதம் இருபத்தைந்தாம் திகதியும் திங்கட்கிழமையும் சோதி நட்சத்திரமும் பூருவபக்க திரயோதசியும் மிதுனலக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் எழுதப்படுகின்ற சாதனம்-

திரு உத்தரகோசமங்கையெனும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கின்ற மாங்களேஸ்வரசுவாமி கோயிலுக்கு இப்போ முதற் பூசைப்பாங்காளராக இருக்கிற காஞ்சீபுரம் கல்யாணசுந்தரக்குருக்கள் முதலாவது மகன் சிவசுப்பிரமணியக்குருக்கள், முதல் ஸ்தானிகராகவும் மற்றவர்கள் தங்கள் தங்கள் பூசைப் பாங்கு முறைப்படி ஸ்தானிகர்களாகவும் மகாராசாவாகிய என்னால் தத்துவங் கொடுக்கப்படுகிறது.

இன்று முதலாக சகலவிதமான காரியங்களையும் செய்யவும் செய்விக்கவும் தத்துவம் கொடுக்கப்படுகிறது. மேற்படி கோயிலிலே உள்ள ஆபரணம் முதலான சகல விதமான சாமான்களும் கஜானாப் போக்கு முதலிய திறவு கோல்களும் மகாராசாவாகிய என்னாலேயே கொடுக்கப்படுகிறது. இன்று தொடக்கம் மேற்படி கோயிலிலே பணிவிடை செய்கிறவர்கள் எல்லோரும் பூசை செய்கிறவர்களும் ஸ்தானிகர்களுமாயிருக்கிற குருக்கள் கட்டளைப்படி நடக்கவேண்டும். மேற்படி

கோயிலுக்குரிய பூமியும் இவர்களாலேயே செய்விக்கப்படவேண்டும். இவர்களுக்கு மங்கள புக்களமென்னும் கிராமத்தை சீவியத்திற்காகக் கொடுக்கிறேன். இவர்க ளுக்குக் கோயிலிலே சம்பளம் கிடையாது. இவர்கள் மங்கள புக்களமென்னும் கிராமத்தை பூசைப்பங்கு ஸ்தானிகர் பங்குபோல முப்பத்திரண்டு பங்காகப் பகிர்ந் துகொள்ளவேண்டியது. இவர்களினால் ஒரு காலத்திலும் கிரயத்திற்குக் கொடுக் கப்படாது. வாங்குகிறவர்களுக்கும் இராச சபையிலேதண்டம் விதிக்கப்படும். மற்றும் பணிவிடைகாரர்களுக்கும், இவர்களாலேயே சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்.

எப்பொழுதும் இவர்கள் மகாராசாவுக்கு விபூதிப் பிரசாதம் அனுப்ப வேண்டியது. இந்தப் பட்டயத்தை சோமசுந்தர சேதுபதி மகாராசாவாகிய என்னாலும் என் னுடைய வம்சத்தினராலும்எந்தக் காலத்திலும் இராமநாதபுரத்தையும், திருஉத்த ரகோசமங்கையையும் இராச்சிய பரிபாலனம் செய்கிற இராசாக்களாலும் இந்தப் பட்டயத்தை அழிக்கப்படாது. மேற்படி கோயிலின் பூசைப்பங்காளராகவும், ஸ்தா னிகர்களாகவும், தத்துவம் பெற்ற குருக்கமார்களுக்கு இந்தப் பட்டயமானது அவரவர்கள் சந்ததி உள்ளவரைக்கும், சூரிய சந்திரர் உள்ளவரைக்கும் விபூதி உத்திராட்சம் அழியாமல் இருக்கும் வரைக்கும் இந்தப் பட்டயமானது அழியாமல் மகாராசாவாகிய என்னாலேயே கொடுக்கப்படுகிறது.

இந்தப் பட்டயத்தை ஒருவராலும் அழிக்க முடியாது. இதிலே என்னுடைய கையெ முத்தும் வைக்கிறேன்.

இங்ஙனம்

**சோமசுந்தர சேதுபதி மகாராசா**

இதற்கு முதற் சாட்சி எனது முதலாவது மந்திரி இராமசாமி

இரண்டாம் சாட்சி எனது முதலாவது சேனாதிபதி சொக்கலிங்கம்

மூன்றாம் சாட்சி எனது புரோகிதர் கிருஷ்ணசாமி ஐயர்

இந்தச் சாட்சிகள் முன்பாக இந்தப் பட்டயத்தை எழுதி முப்பத்திரண்டு குருக் கமார்களுக்கும் கொடுத்தேன் அவர்களும் தங்கள் கைச்சாத்திட்டு ஏற்றுக்கொண் டார்கள்.

இராமநாதபுத்திலேயுள்ள திரு உத்தரகோசமங்கை தேவஸ்தானத்திலேயும் ஒரு பட்டயமிருக்கும். இவ்வளவு விஷயங்களும் சோமசுந்தர சேதுபதி மகாராசாவாகிய என்னாலேயே முப்பத்திரண்டு குருக்கமாருக்கும் எழுதிக்கொடுத்து இதோடு பட்டயமும் கொடுக்கப்பட்டது. காஞ்சிபுரத்திலே இருந்து வந்த கல்யாணசுந்தரக் குருக்கள் முதலாவது மகன் சிவசுப்பிரமணியக் குருக்களாகிய நான் இந்தச் சரித்திரத்தை எழுதத் தொடங்குகிறேன்.

எனது தகப்பன் கல்யாணசுந்தரக் குருக்கள். காஞ்சிபுரத்திலே இருக்கிறார்கள். எனது தம்பிமாராகிய ஏகாம்பரக்குருக்களும் சபாபதிக் குருக்களும் காஞ் சிபுரத்திலேயே இருக்கிறார்கள். நான் திரு உத்திரகோசமங்கையென்னும் இந்த இடத்திலே இருக்கிற சொக்க நாதக் குருக்கள். முதலாவது மகள் ஞானப்பூங்கோதை அம்மாளை விவாகம் செய்து இருபத்திரண்டு வருட காலம் முதற்பூசைப் பங்காள ராக இருந்து வருகிறேன். எனக்கு முதற்பூசைப் பங்கு வந்த காரணம் நான் விவாகம் செய்து முதல்முறை இராசசபைக்கு போனபோது இராசாவின் பேரிலே சமஸ்கிருத கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டு போய் மகாராசா முன்பு வாசித் தேன். என்னோடு வந்த மற்றவர்கள் மகாராசாவின் பேரிலே ஒன்றும் வாசிக் கவில்லை நான் வாசித்தவுடன் மகாராசா சந்தோஷப்பட்டு நீர் சமஸ்கிருதம் நன் றாக வாசித்திருக்கிறீர். மற்றவர்கள் நன்றாய் வாசித்ததாகத் தெரியவில்லை. ஆன தன்மையினால் நீரே இன்று முதலாக உத்தரகோசமங்கையிலேயுள்ள மங்க ளேசுவர சுவாமி கோயிலுக்கு முதற் பூசைப் பங்காளராக இருக்க வேண்டியது என்று சோமசுந்தரசேதுபதி மகாராசா சொன்னார்.

அந்தநாள் தொடக்கம் நானே முதற்பூசைக்காரனாக இருந்து வருகிறேன். எனது மகன் கார்த்திகேயக் குருக்களின் புத்திரர் திருநீலகண்டக் குருக்கள் இவர் புத்திரர் விசுவநாதக்குருக்கள். விசுவநாதக்குருக்களாகிய எனது காலத்தில் முன்னே சொல்லப்பட்ட முப்பத்திரண்டு குருக்கமார்களில் நாலு வீட்டுக்காரர் சந்ததியின்றி அழிந்து போனார்கள். இப்போது இருப்பவர்கள் இருபத்தெட்டு வீட் டுக்காரர். இவ்விருபத்தெட்டு வீட்டுக்காரருமே பூசைப் பங்கையும் ஸ்தானிகர் வேலையையும் பார்த்து வருகிறோம்.

இப்படிப் பார்த்து வருங் காலத்தில் இங்கே பெரும் கலகம் உண்டுபட்டது.

இந்தக் கலகத்துக்குப் பயந்து எனது சித்தப்பா மகன் வைத்தியேசுவரக் குருக்களும், எங்கள் பூசைப் பங்கையும் ஸ்தானிகர் வேலையையும் எங்களது அடுத்த பங்காளர் இரத்தினசபாபதிக் குருக்களிடம் ஒப்பித்துவிட்டு நாங்களிருவரும் எங்கள் சமுசாரமும் காஞ்சிபுரம் போய் அங்கே ஒரு வருஷம் வரையிலிருந்து மறுபடியும் திருஉத்தரகோசமங்கை வந்து பார்த்தபோது பதினாறு வீட்டுக்காரரையும் காணவில்லை. இரத்தின சபாபதிக்குருக்களைக் கேட்டபோது அவர் சொன்னார் பதின்மூன்று வீட்டுக்காரர் இன்ன இடம்போனார்களென்பது தெரியவில்லை. மூன்று வீட்டுக்காரர் வைசூரியினாலிறந்து விட்டார்கள் என்பதாகச் சொன்னார். இப்போது இங்கே இருக்கிறவர்கள் பத்து வீட்டுக்காரர். என்பதாகவும் சொன்னார். இரண்டு வருஷகாலம் பன்னிரண்டு வீட்டுக்காரருமே பூசைப்பங்கையும் ஸ்தானிகர் வேலையையும் பார்த்து வந்தோம். மறுபடி இராமலிங்க சேதுபதி மகாராசா முன்பாக நாங்கள் பன்னிரண்டு பேரும் போய் பூசையை விட்டுப் போனவர்களது பங்கையும் இறந்தவர்களினது பங்கையும் பற்றி முறையிட்ட பொழுது மகாராசா அவர்கள் சரிவரப் பன்னிரண்டு பங்காகப் பகிர்ந்து எங்களுக்குள்ளே வியாச்சியமில்லாமல் மக்களம், புக்களம் முதலிய வயற்கிராமங்களையும் பன்னிரண்டு பங்காகவே பங்கிட்டுத் தந்தார்.

அந்தநாள் முதல் நாங்கள் பன்னிரண்டு வீட்டுக்காரருமே பூசையையும் ஸ்தானிகர் வேலையையும் நடத்தி வருகிறோம். இவ்வளவும் விசுவாநாதக் குருக்களாகிய என்னால் எழுதப்பட்டது. எனக்கு வயது எண்பத்தாறு.

விசுவநாதக் குருக்கள் புத்திரன் காங்கேயக் குருக்கள், புத்திரர் ஆதிசி தம்பரேஸ்வரக் குருக்கள் இவர் புத்திரர் மாணிக்க வாசகக் குருக்கள். இவர் புத்திரர் பரமேஸ்வரக் குருக்கள். இவர் புத்திரர் பாலசுப்பிரமணியக்குருக்கள். இவர் புத்திரர் கனகசபாபதிக்குருக்கள், இவர் புத்திரர் வையாபுரிக்குருக்கள். இவர் புத்திரர் சுந்தரேசுவரக்குருக்கள், இவர் புத்திரர் குருசாமிக் குருக்கள். இவர் புத்திரர் மாணிக்கவாசகக் குருக்கள். இவர் புத்திரர் மாங்களேசுவரக் குருக்கள். இவ்வளவும் மங்களேசுவரக் குருக்களாகிய என்னால் எழுதப்பட்டது. நாங்கள் பன்னிரண்டாம் வீட்டுக்காரரும் கோவிற்பூசையை ஒழுங்காகப் பார்த்து வந்தோம்.

இப்படி நடக்குங் காலத்தில் இங்கே பெரும் கலகம் உண்டுபட்டது. கலகமானது

ஒரு வருஷகாலம் தீராமலே நெடுக நடந்து கொண்டேயிருந்தது. இந்தக் கலகத்தை மங்களேசுவர சேதுபதி மகாராசாவினாலும் அடக்கிக் கொள்ள முடியவில்லை. நாங்களும் கலகத்துக்குப் பயந்து மங்களேசுவர சேதுபதி ராசாவிடம் முறையிட்ட போது அவர் கவனிக்கவில்லை. நாங்கள் சொல்லியதை மகாராசாவும் கவனியாதபடியால் நாங்களொருவகையாலும் இங்கேயிருந்து பூசை செய்ய முடியாதவர்களாயிருக்கிறோம். சொற்ப காலம் இந்தத் தேசத்தைவிட்டு கலகம் தீர்ந்தபின் மறுபடி வருவோமென்று மனதில் நினைத்துக்கொண்டு நாங்கள் நாலு வீட்டுக்காரரும் மங்களேசுவரக் குருக்களாகிய நானும் சுந்தரேசுவரக் குருக்களும், அருணாசலக் குருக்களும் , இராமலிங்க குருக்களும் ஆகிய நாலு வீட்டுக்காரரும் மற்ற எட்டுக் குருக்கள்மார்வசம் எங்கள் பூசையை ஒப்புவித்துவிட்டு நாங்கள் நாலு பேரும் மற்றக் குருக்கள் மாரறியாதபடி எங்களிடத்தே இருந்த ஆபரணம் முதலிய சாமான்களெல்லாவற்றையும் மங்களேசுவரசுவாமி கோயிலின் தெற்குப் பக்கத்திலேயிருக்கிற போக்கிலே அடக்கம் செய்து போக்கைக் கபாட பந்தனம் செய்துகொண்டு கோயில் மகாமண்டபத்தில் ஈசானிய பாகத்திலிருக்கும் தூணில் துவாரம் செய்து அதில் திறவுகோலை வைத்து அதன் மேல் அரக்கு வைத்து அதில் யானை காசு முத்திரை செய்து வைத்துப் போட்டு நானுமெனது சமுசாரமும் சுந்தரேசுவரக் குருக்களும் அருணாசலக் குருக்களும், இராமலிங்கக் குருக்களும் அவரவர்கள் சமுசாரமும் பிள்ளைகளும் சுவாமி தெரிசனம் செய்து அவ்வவ் விடத்தை விட்டு நீங்கினோம்.

அவ்விடத்தை விட்டு நீங்கும்போது எங்களெல்லோருக்கும் மனதிலே மிகுந்த துக்கமும், அழுகையுமாகவே இருந்தன. பிரயாணமாய்த் தெற்சயனம் வந்து வெற்றிலை மண்டபமடைந்து, இராமேசுரம் வந்து ஆறுமைல் தூரமுள்ள சேது வையடைந்து, சங்கற்பமுடன் ஸ்நானம் செய்து கந்தமாதனத்தைத் தெரிசித்து சேதுமாதவரையும் சேதுகாவலனையும் தெரிசித்து வருகையில் சுந்தரேசுவரக்குருக்கள் மனைவி சேஷம்மா வைசூரி நோயாலிறந்து விட்டாள்.

சுந்தரேசுவரக் குருக்கள் புனர்விவாகம் செய்ய மனமில்லாதவராய் இருந்தார். ஆறுமாசம் வரையில் ராமேசுரத்திலிருந்தோம். அப்போதும் உத்தி ரகோசமங்கையில் கலகந்தீரவில்லை. எவ்விடம் போகின்றதென்று தெரியாமல் அதிக மனவியாகூலமாயிருக்கையில் வித்துவசிரோமணியும், சைவசமயப் பிர

புவும் தனவானுமாகிய ஒருவரைக் கண்டோம். ஒருவருக்குக் கொருவர் யோக க்ஷேமங்களையும் ஊர் பெயரையும் விசாரிக்கும்போது வித்துவசிரோன்மணியும் சைவசமயப் பிரபுவுமாகிய தனவான் தன்னுடைய பெயர் முத்துமாணிக்கம் செட்டியாரெனவும் தாமிருப்பது யாழ்ப்பாணம் எனவும் சொன்னார். யாழ்ப் பாணமென்ற தேசம் எந்த ஜில்லாவிலேயுள்ளது என்று விசாரித்தேன்.

அவரதற்கு இராவணனால் இராச்சியம் செய்த இலங்கையிலே வடக்குப் பக்கத்திலேயுள்ள ஓர் தேசம் யாழ்ப்பாணம் என்றும், பெயர் வந்த காரணம், இந்தியாவாகிய இங்கே சோழதேசத்திலே தொண்டை நாட்டிலுள்ள கவிவீர ராகவனென்னும் குருடன், தனது மனைவியோடு கோபித்துக்கொண்டு இலங் கையிலே மணற்றி என்னும் இடத்திலிறங்கி செங்கடகல நகரிலேயிருக்கிற செய துங்கவரராசசிங்கனெனப் பெயரையுடைய இராசனது சபையையடைந்து இரா சாவின் பேரிற் பாடி அந்தப் பிரபந்தத்தை முடித்தான். இராசா யாழ்ப்பாடியின் பேரிற் சந்தோசப்பட்டு அவனுக்கு மணற்றி என்னும் இடத்தையும் யானை, குதிரை, பல்லக்கு முதலிய சாமான்களையும் கொடுத்து அனுப்பினார். யாழ்ப்பாடி அரசனுக்குப் பல ஆசிகூறி அவற்றைப் பெற்றுக்கொண்டு மணற்றியை அடைந்து மணற்றி எங்கும் சுற்றிப் பார்த்து நல்லூருக்குச் சமீபத்திலே பாணன் என்னும் குளத்தையும் வெட்டுவித்து அவ்விடத்தில் இராச்சியத்தை நடத்தினார். தான் பரிசாகப் பெற்ற இடத்திற்கு யாழ்ப்பாணம் என்னும் பெயரை வைத்து அரசாட்சி செய்தான்.

அந்த யாழ்ப்பாணத்திற்கு வடமேற்குப் பக்கமாய் சமுத்திரத்தாற் சூழப்பெற்ற காரைதீவிலேயுள்ள ஊர்காவற்றுறைக்குச் சமீபமாக இப்போ இருக்கிறவர் ராம சேதுமகாராசாவின் மகன். இவ் அரசன் இருந்த இடம் இப்பொழுது இராசாவின் தோட்டம் என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது. குளக்கோட்டு மகாராசாவினால் "வியாவில்" என்னுமிடத்திற் கட்டப்பட்ட ஐயனார் கோவிற் பூசைக்கு குருக்கமாரை அழைத்துவரும்படி குளக்கோட்டு மகாராசா என்னை அனுப்பினார். குருக்கமாரை அழைப்பதற்கு வந்து சேர்ந்தேன் என்று சொல்லியதைக் கேட்ட நான் யாழ்ப்பாணம் போவதே நல்லதென்று மனதிலே தீர்மானம் செய்துகொண்டு என்னோடு வந்த மூவரையும் கேட்டேன். கேட்டதற்கு அருணாசலக்குருக்களும் இராமலிங்கக் குருக்களும் தாங்கள் யாழ்ப்பாணம் வரவில்லை என்று சொல்லிவிட்டார்கள்.

சுந்தரேசுவரக்குருக்கள் என்னோடு யாழ்ப்பாணம் வருவதாகச் சொன்னார். முத்துமாணிக்கஞ் செட்டியாருக்கு நான் சொல்லியது என்னவானால் நாங் களிருவரும் சம்சார சகிதமாய் உம்மோடு யாழ்ப்பாணம் வருகிறோம். நீர் வேறோரிடமும் குருக்கமாரை அழைக்கப்போகவேண்டாம் என்று சொல்லியதை முத்துமாணிக்கஞ் செட்டியார் கேட்டு மிகச் சந்தோஷப்பட்டு நான் உங்களையே அழைத்துப் போவதாக மனதிலே நினைக்க நீங்களாகவே யாழ்ப்பாணம் வருகிறோம் என்றது எனக்கு மிகச் சந்தோஷமாயிருக்கிறது. ஆனபடியால் காவிரிப்பூம் பட்டினத்துள்ள எனது தாய் தந்தையாரது தபத்தினாலும் இராமலிங்கப் பெருமானுடைய அனுக்கிரகத்தினாலும் நான் குருக்கமாருக்குத் தேடித்திரிந்து அலையாமல் நீங்கள் வருகிறோமென்று சொல்லியது மிகச் சந்தோஷம்.

நான் காவிரிப்பூம் பட்டினத்திற்குப் போய் எனது தாய் தந்தையரைக் கண்டு வருகிறேன். அதுவரையும் நீங்கள் இவ்விடத்திலிருக்கலாம் என்று சொன்னார். எங்களுக்குத் தான் வருமளவும் செலவுக்குக் காசு தந்து விட்டுப்போய் விட்டார்.

போய்த் தனது ஊரிலே இரண்டு மாசம் வரையில் நின்று மறுபடி இங்கே வந்தார். வந்தவுடன் சுந்தரேஸ்வரக் குருக்களைப் புனர்விவாகம் செய்துகொண்டே யாழ்ப்பாணம் வரவேண்டும் என்று சொன்னார்.

அதற்கவர் சம்மதியாமல் மறுத்தார். நானும் செட்டியாரும் சொல்லியது நீர் கட்டாயம் விவாகம் செய்ய வேண்டியது என்று சொல்லித் தானே விவாகச் செலவைத் தருகிறேனென்றும் செட்டிரர் சொன்னார்.

சுந்தரேசுவரக் குருக்களும் இதற்குடன்பட்டுச் செட்டியாரிடம் காசு வாங்கிக் கொண்டு நானும் எனது சம்சாரமும் சுந்தரேசுவரக் குருக்களும் திருவை யாற்றுக்குப் போய் அங்கே பஞ்சநதேஸ்வரக் குருக்களின் இரண்டாவது புத் திரி அமிருதாம்பிகை அம்மாளை விவாகம் செய்து அவ்விடம் ஒரு மாசம் வரை யிலிருந்து மறுபடி இராமேசுவரம் வந்தோம்.

செட்டியாரைக் கண்டு யாழ்ப்பாணம் எப்போ போவது என்று கேட்டேன். அதற்கு அவர் பரிசாரகப் பிராமணரைச் சம்பாதித்துக்கொண்டு புறப்படுகிறதென்று

சொன்னார். நான் மனதிலே யோசனை செய்து உத்தரகோசமங்கையிலே கலைகிருக்கிறபடியால் அங்கே போனால் பரிசாரகப் பிராமணரைக்கொண்டு வரலாம் என்று சொன்னேன். அதைச் செட்டியார் கேட்டு நீங்களும் என்னுடன் வந்தால் இலகுவிற் கொண்டு வரலாமென்று சொன்னார்.

நானும் செட்டியாரும் உத்தரகோசமங்கைக்குப் போய் அங்கேயுள்ள நாலு வடகலை வைஷ்ணவப் பிராமணர்களை சம்சாரத்தோடு அழைத்துக்கொண்டு இராமேசுவரம் வந்தோம்.

செட்டியார் எங்களெல்லோரையும் எங்கள் விடுதியில் விட்டு எங்களுக்குச் செலவுக்கு ரூபாய் தந்துவிட்டு சேதுவிலே போய் தீர்த்தமாடிக் கந்தமாதனத்தைத் தெரிசித்து இராமலிங்கப் பெருமானையும் பறுவதவர்த்தனி அம்மாளையும் தெரிசித்து வந்து எங்கள் விடுதியிலேயே இருந்தார். இரண்டு நாள் சென்ற பின் யாழ்ப்பாணம் போவோம் என்று யோசனை செய்தார். அப்படி யோசனை செய்து கொண்டிருக்கும்போது முத்துமாணிக்கம் செட்டியார் கப்பலில் கொழும்பு சென்றிருந்த தைரியலட்சுமி என்று பெயர் தரித்த கப்பல் பாம்பன் வந்துவிட்டதாக மாலுமி வழியாலறிந்து சந்தோஷமடைந்து என்னோடு நாங்களினி யாழ்ப்பாணம் போவதற்குப் புறப்படுவோம் என்று சொன்னார். நானுமதற்குடன்பட்டு நானுமெனது சமுசாரமும் சுந்தரேசுவரக்குருக்கள் சமுசாரமும் வடகலை வைஷ்ணவப் பிரமாணர்களும் அவர்களின் சமுசாரங்களும் பாம்பனை அடைந்தோம்.

செட்டியாரும் அவர் சமுசாரமும் பிள்ளைகளும் அவர்களது தேசத்திலிருந்து கொண்டுவந்த விக்கிரகங்களையும் கொண்டு பாம்பனை அடைந்தார். எல் லோரும் நித்தியாகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு காலை ஏழு மணிக்குக் கப்பலில் ஏறிப் பிரயாணமாய் சேதுக் கரையைக் கண்டு, அது மறைந்த பின் கச்சைதீவு கண்டு அது மறைய பின் சஞ்சீவி என்னும் பொற்சீந்திலையுடைய நீஷ்த்த ஆயுளைத் தாங்கும் மானிடரைப் பெற்ற பூமியாகிய நெடுந்தீவு கண்டு அது மறைய நாகர்தீவு பப்பரவாகன் சல்லியன் குடியில் எழுந்திருக்கும் நாகபூஷணி அம்மாள் கோயிலில் கோபுர சிகரத்தையும் நாகஞ்சுற்றிய கல்லையும் கண்டு பின் நாகேசுரன் கோயிலைக் கண்டு அதன் பின் அனலைதீவு கண்டு பின் எழுகடல் ஒருமித்துச் சேரும் சுளிக்கு பாகமாயிருக்கும் எழுவதீவு கண்டு அதன்பின்

பவளப்பூச்சிகளாலும் வருணராசன் முருகைக் கற்களாகலும் உண்டு பண்ணிய காரைதீவு கண்டு ஊர்காவற்றுறை என்றும் துறைமுகத்தையடைந்து கப்பலை விட்டிறங்கினோம்.

ஊர்காற்றுறையிலே நின்று கொண்டு செட்டியாராவர்கள் எங்கள் வரவையும் தனது வரவையும் ஏவலாளர்களால் இராசாவுக்கு அறிவிக்க அரசர் சதுரங்க சேனைகளுடன் செட்டியாரையும் எங்களையுமடைந்து எங்களை முத்துப் பல்லக்கிலும் தானும் செட்டியாரும் முத்துச் சிவிகைகளிலுமமர்ந்து சதுரங்க சேனைகளுடனும் சகல வாத்தியங்களுடனும் இராச மாளிகையை அடைந்தோம். எங்களை முத்துப் பல்லக்கிலிருந்து இறங்கும்படி செய்து, தாங்களுமிறங்கி இராச மாளிகையை அடைந்து எங்களுக்கு வேண்டிய உபசரணைகள் செய்து வேண்டிய திரவியங்களும் தந்து மறுபடியும் எங்களை முத்துப் பல்லக்கிலேற்றி தாங்களும் முத்துச் சிவிகையில் ஏறி வியாவில் என்று வழங்கும் பதியையடைந்து புதிதாய்க் கட்டப்பட்ட ஐயனார் கோவிலுக்கு ஈசான்ய பாகத்திலே எங்களுக்காகவும் கட்டப்பட்ட மடவழாகத்திலே எங்களை இறக்கித் தாங்களுமிறங்கி நாங்கள் ஸ்நானம் பூசை போசனம் முடிந்தபின் அவர்கட்கு மன்னாங் கொடுத்து அவர்கட்கு வேண்டிய உபசரணைகள் செய்து அனுப்பினோம். சில நாட்கள் சென்றபின் இராசா எங்களை அழைப்பித்துக் கும்பாபிஷேக முகூர்த்தம் வைக்கச் சொன்னார். நாங்களிருவரும் இராச சபையை அடைந்து அரசருக்கு முன்பாக இருந்து அதாவது முதல் நாளிகேரதாடனம் பண்ணினோம். நாளிகேர தாடனம் பண்ணும்போது கெவுளி சொல்லியது. கெவுளிச் சாஸ்திரம் பார்த்தோம். அது நல்லாயிருக்கவில்லை. கெவுளியின் பலனை அரசர்க்குச்சொன்னோம். இராசாவும் இன்றையிற் தினத்தைவிட்டு இன்னொரு நாளைக்கு முகூர்த்தம் வைப்போமென்று எங்களை அனுப்பிவிட்டார்.

ஒரு மாசம் சென்றபின் மறுபடியும் எங்களை அழைப்பித்துக் கும்பாபிஷேக முகூர்த்தம் வைக்கச் சொன்னார்கள். நாங்களுமவ்விடம் போய் அரசர் முகதாவில் முகூர்த்தம் வைக்க ஆரம்பித்து நாளிகேரதாடனம் செய்தோம். நாளிகேரம் கவிழ்ந்து போய்விட்டது. அதையும் அரசர்க்கு அறிவிக்க அரசர் வெகுவாய் யோசனை செய்துவிட்டு.

கோயில்கட்டி வெகுகாலமாகி விட்டது. ஆனபடியால் கும்பாபிஷேகம் செய் யாமலிருக்கிறதே துர்ச்சகுனமாய் வந்தது போலும்.. ஆனபடியால் முகூர்த்தம் வைப்பதே நல்லது. மறுபடி ஒரு தேங்காயெடுத்து உடைத்து வைத்து முகூர்த்தம் வைக்கத் தொடங்கினோம். அதாவது பிரபாவதி 36 பிலவ வருடம் வைகாசி மாதம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் திருவோண நட்சத்திரமும் சிங்க லக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்திலேயே செய்யலாமென்று சொன்னோம். அதை இராசா கேட்டு முத்துமாணிக்கம் செட்டியாரை ஸ்தானிகராய் நியமித்து அவர் விருப்பப்படி கும்பாபிஷேகத்தைச் செய்யும்படி சொன்னார்கள்.

முத்துமாணிக்கஞ் செட்டியாருமிதற்கு உடன்பட்டு எங்களால் வைக்கப்பட்ட முகூர்த்தத்திலேயே கும்பாபிஷேகத்தைச்செய்து பூசை உற்சவம் முதலியவைகளும் கிரமமாய் நடத்தி வந்தோம் வியாவில் ஐயனார் கோவில் கும்பாபிஷேகம் செய்த தினம் கலியபதம் நாலாயிரத்து எழுநூற்றுமூன்று சாலிவாகன சகாப்தம் ஆயிரத்தைஞ் நூற்றுப் பதினெட்டு பிரபவாதி வருஷம் முப்பத்தைந்தாவது பிலவ வருடம் வைகாசி மாசம் 25 ஆம் திகதி நடைபெற்றது.

ஷ சொற்பகாலஞ் சென்றபின் மகாராசா அவர்களால் எங்களிருவருக்கும் செப்புப்பட்டயம் தரப்பட்டது. அந்தச் செப்புப் பட்டயமாகிய சாதனத்திலே எழுதிய வாசகம் இலங்கையிலே யாழ்ப்பாணத்தில் வடமேற்குப் பக்கமாய் சமுத் திரத்தாற் சூழப்பெற்ற காரைதீவிலே வியாவில் என்னுமிடத்தில் இந்தி யாவில் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து வந்து இப்போ காரைதீவிலே ஊர் காவற்றுறையில் இருக்கிற வரராம சேதுமகாராசா மகன் குளக்கோட்டு மகாராசாவாகிய என்னால் முற்சொல்லிய இடத்திற் கட்டுவிக்கப்பட்ட ஐயனார் கோயிலுக்குப் பூசகராயிருக்கிற திருஉத்தரகோசமங்கையிலிருந்து என்னால் அழைக்கப்பட்ட மங்களேசுவரக்குருக்களுக்கும் எழுதுகிற சாதனம் கலியப்தம் நாலாயிரத்து எழுநூற்றைந்து சாலிவாகன சகாப்தம் ஆயிரத்தைந் நூற்றிருபது பிரபவாதி வருஷம் முப்பத்தேழாவது சோபகிருது வருஷம் சித்திரை மாசம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உத்தர நட்சத்திரம் கூடிய சுபமுகூர்த்தத்தில் எழுதிய சாதனம். மேலே சொல்லப்பட்ட குருக்கள்மார் இருவருக்கும் தங்க ளிஷ்டப்படி நித்திய நைமித்தியம் காமிகம் முதலிய சகல கிரியைகளையும் செய்யவும் செய்விக்கவும் புராணம் வாசிக்கவும் முத்துமாணிக்கஞ் செட்டி

யாருக்குப் பிறகு ஸ்தானிகராகவும் கோயிலுக்குரிய சகல காரியங்களையும் செய்கிறவர்களாகவும் தங்களிஷ்டப்படி செய்விக்கிறவர்களாகவும் தத்துவம் பெறுகிறார்கள். இத் தத்துவமானது என்றும் எனது சந்ததியாராலும் அழிக் கப்படாது குருக்கள் மாருக்கும் அவர்கள் சந்ததி உள்ளவரைக்கும் மேலே சொல்லிய தத்துவமானது குளக்கோட்டு மகாராசா என்னும் பெயரையுடைய நான் எனது கையொப்பமிட்டுக் கொடுக்கிறேன். எனது கையொப்பம் குளக் கோட்டுமகாராசா. முதலாஞ் சாட்சி சி.முத்துமாணிக்கஞ் செட்டியார். இரண் டாஞ் சாட்சி வைத்தியனாதபிள்ளை இராமுப்பிள்ளை மூன்றாம் சாட்சி நாரா யணபிள்ளை கந்தப்பிள்ளை இவர்கள் முன்பாக இந்தப் பட்டயத்தை எழுதி முடித்து ஒரு பிரதியை நான் எடுத்துக்கொண்டு மற்ற இரண்டையும் இரண்டு குருக்கள்மாரிடம் கொடுத்தேன்.

☙ அவர்களும் தங்கள் கையெழுத்திட்டு ஏற்றுக்கொண்டார்கள். இராசா அவர்கள் தந்த செப்புப் பட்டயத்தை நாங்கள் பெற்றுக்கொண்டு கோயிற்பூசை யையும் மிக ஒழுங்காய் நடத்திவந்தோம். சொற்பகாலஞ் சென்றபின் எனக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள் முதலாவது புத்திரி மங்களாம்பிகை அம்மாள், இரண்டாவது புத்திரன் சூரியநாராயணக் குருக்கள். மறுபடியுமிரு வரும் பூசை செய்து கொண்டு வந்தோம் எனது மகனுக்கு விவாகம் செய்கிறதற்கு இந்தியாவிற்குப் போய் இராமனாதபுரத்திலேயேயுள்ள சொக்க னாத கோயிலருச்சகர் வேதாரண்யேசுவரக் குருக்களின் இரண்டாவது மகன் சேதுமாதவக் குருக்களுக்கு நமதுபெண்ணை விவாகம் செய்து விட்டு வந்தேன்.

☙ மறுபடியும் சிறிது காலஞ்சென்றபின் சுந்தரேசுவரக் குருக்களைப் பூசைக்கு வைத்துவிட்டு நானும் மனைவியும் மகனும் இந்தியாவுக்குப் போய் இராமனாதபுரத்தை அடைந்து மகனையும் மருமகளையும் அழைத் துக்கொண்டு கும்பகோணம்போய் உத்தரகோசமங்கையிலிருந்து என்னோடு புறப்பட்டுப்போன அருணாசலக் குருக்கள் மூன்றாம் புத்திரி உருக்குமணி அம்மாவை விவாகம் செய்து அவ்விடம் இரண்டுமாசம் வரையிருந்தோம். எங்களோடு உத்தரகோசமங்கையிலிருந்து புறப்பட்ட இராமலிங்கக் குருக்கள் எவ்விடம் போனாரென்று அருணாசலம் குருக்களைக் கேட்டேன். அவரதற்கு எனது சம்சாரம் கும்பகோணத்திலேயுள்ளது. நான் இங்கே வந்துவிட்டேன்.

அவரது தாய் செருத் தணியிலேயுள்ளவர் அவரும் சம்சாரமும் பிள்ளைகளும் அங்கே போய்விட்டார்கள் என்று சொன்னார்கள். மறுபடி நானும் சம்சாரமும் மகளும் மருமகனும், மகனும் மருமகளும் கும்பகோணத்தைவிட்டுப் புறப்பட்டு இராமனாதபுரம் வந்து அங்கே மகளையும் மருமகனையும் அனுப்பிவிட்டு நாங்கள் நால்வரும் யாழ்ப்பாணம் வந்தோம். இங்கே வந்து எங்கள் பூசைப் பங்கையும் ஊர்க்காரியங்களையும் நானும் எனது மகனும் பார்த்துவந்தோம். சுந்தரேசுவரக் குருக்களும் எங்களோடு ஒற்றுமையாய் தனது பங்கைப் பார்த்து வருகிறார். இப்படியாக இருபத்தைந்து வருடங்களாக பார்த்து வருகிறோம். இவ்வளவு மங்களேசுவரக் குருக்களாகி என்னால் எழுதப்பட்டது. எனக்கு இப்பொழுது வயது அறுப்தெட்டு.

☙ இப்படியாக நாங்கள் மூவரும் பூசையையும் ஊர்க் காரியங்களையும் பார்த்து வந்தோம். சில வருஷம் சென்றபின் எனது பிதா மங்களேசுவரக் குருக்கள் இறந்துவிட்டார். நானுமெனது தமையனாரும் கோயிற்பூசை செய்துவரும் காலத்தில் தமிழ் இராச்சியம் போய்விட்டது. முத்துமாணிக்கம் செட்டியாரும் இறந்து விட்டார். போர்த்துக்கீசர் என்னும் பறங்கியர் கிறீஸ்து வருஷம் 1618 ஆம் ஆண்டு காலயுத்திவருஷம் ஊர்காவற்றுறைக்கு வந்தார்கள் அநேக சைவ சமயக் கோயில்களை இடித்துப்போட்டார்கள். இங்கே உள்ள ஐயனார் கோயிலை இடிக்க வந்து கோபுர வாசலின் கதவைத் திறக்க போனார்கள். அவர்களின் வாயிலிருந்து இரத்தம் புறப்பட்டு இறந்து விட்டார்கள்.

☙ அந்தப் பயத்தினால் மறுபடி கோயிலை இடிக்க வரவில்லை. பறங்கியரசு வந்து ஒரு வருஷத்தின் மேல் பெரிய அம்மை நோய் வந்தது. அந்த நோயால் ஊர்களிலனேகம் பேர் இறந்து விட்டார்கள். அந்த நேரத்தில் எனது தமையனார் சுந்தரேசுவரக் குருக்களும் அவர் மனைவியும் இறந்து விட்டார்கள். இங்கே வேறு குருக்கமார் ஒருவருமில்லை. நானும் வடகலை வைஷ்ணவப் பிராமணருமாக இந்தோம். சுந்தரேசுவரக் குருக்களுக்குப் பிள்ளையில்லாத படியால் அவரது சந்ததி அவ்வளவில் அற்றுப்போயிற்று. அம்மைநோய் அகலுவதற்காக முத்துத் தாண்டவரென்பவர் மணற்காடு என்றழைக்கப்படும் இடத்தில் ஓர் முத்துமாரி ஆலயத்தை ஒரு மாசத்திற்கட்டி முடித்து என்னைக் கொண்டு கும்பாபிஷேகம் செய்வித்துத் திருவிழா வேள்வி முதலியவைகள்

செய்து முடிய அம்மைநோயும் குறைந்து விட்டன. பறங்கிகள் தங்கள் சமயத்தின்படி எத்தனையோ ஆராதனை செய்தும் நோய் குறையவில்லை. ஆனபடியால் நாங்கள் செய்த வழிபாட்டைத் தடுக்க முயலவில்லை.

☙ ஐயனார் கோயிற் பூசையையும் மாரி அம்மன் கோயிற் பூசையையும் நானே செய்து வருகிறேன். சொற்பகாலம் சென்றபின் எனக்குக் கனகசபாபதிக் குருக்கள் பிறந்தார். பறுவதம் என்னும் பெண் பிள்ளையும் பிறந்தது. இவ்வளவும் சூரியநாராயணக் குருக்களாகிய என்னால் எழுதப்பட்டது.

☙ எனது தகப்பன் சூரியநாராயணக் குருக்கள் இறக்கும் போது நானுமெனது சகோதரியும் தாயும் பரிசாரகப் பிராமணர்களுமேயன்றி வேறொருவரும் காரைதீவில் இல்லை. நானே இரண்டு கோயிற் பூசைகயையும் செய்து வந்தேன். கொஞ்சக் காலத்தின் பின் எனது சகோதரிக்கு கீரிமலையிலே உள்ள சுப்பிரமணியக் குருக்களின் மகன் மகாதேவக் குருக்களை மணம்செய்து வைத்தேன். நானும் அவரது மகள் பறுவத அம்பாளை விவாகம் செய்தேன். நானுமெனது மைத்துனனுமாக இங்கேயுள்ள கோயிற் பூசையையும் ஊர்காரியங்களையும் பார்த்து வந்தோம். பின்னர் போர்த்துக்கீச ராச்சியம் போய் ஒல்லாந்த ராச்சியம் வந்தது. அவர்கள் கிறீஸ்து வருஷம் 1658 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருஷம் சித்திரை மாதம் ஊர்காற்றுறையைப் பிடித்தனர். ஊர்காவற்றுறை பிடிபட்ட ஒரு மாதத்திற்குள் அநேக சைவசமயக் கோவில்களையும் இடித்துவிட்டு இந்த ஐயனார் கோவிலையும் இடிக்கவந்தபோது நாலுபேர் கண் தெரியாதவர்களாயும் இரண்டு பேர் நடக்கமாட்டாதவர்களாயும் போனார்கள். இது நடந்து கொஞ்சக் காலத்தின் பின் எங்களைப் பூசை செய்யாது தடுத்தனர். அவர்கள் போனபிற்பாடு விக்கிரகங்கள் எல்லாவற்றையும் நில அறையில் வைத்து இரகசியமாய்ப் பூசை செய்து வரும் போது ஒருநாள் வந்து கோவிலையும் இடித்து கடலுக்குள்ளே ஓர் கோட்டையையும் கட்டினார்கள்.

☙ அதன்பின் நில அறையில் விக்கிரகங்களுக்குப் பூசை செய்வதையறிந்து சுவாமி எல்லாவற்றையும் கோயிற் சாமான்கள் சகலதையும் கிணற்றுக் குள்ளே போட்டு "வீரன்" என்பவனையும் வெட்டிப் பலி கொடுத்துப் போய் விட்டார்கள். தேரையும் வாகனங்களையும் கடலிலே விட்டுவிட்டார்கள். ஆபர

ணங்களெல்லாவற்றையும் எடுத்துக் கொண்டார்கள்.

☙ இப்படி இருக்கும் காலத்தில் எனக்குப் பிள்ளை பிறந்தது. அவர்களுக்கு அறிவிக்கவேண்டிய கட்டளைச் சட்டமிருப்பதால் அவர்களுக்கு அறிவித்தேன். அவர்கள் வந்து தண்ணீர் தெளித்து "தாமன்" என்னும் பெயர் வைத்துப் போய்விட்டார்கள். குருக்கள் என்று பெயர் வைக்கப்படாதெனவும் சொன்னார்கள். எங்கள் சாதியில் குரு இருக்கிறதேயன்றி மற்றச் சாதியில் இருக்கப்படாதெனவும் சட்டம் வைத்து இருந்தபடியால் எங்களுக்குரிய கிரியைகளை இரகசியமாய் முடித்து தாமோதரஐயர் எனப் பெயர் வைத்து வளர்த்து வந்தேன்.

☙ சைவசமயம் என்ற பேச்சு அவர்களின் காதிற்கேட்கப்படாது. விபூதியும் பூசப்படாது. நான் பகலில் எங்களுக்குரிய காணிகளை உழுதுவித்து வேலை செய்து பொழுது போனபின் வீடுவந்து இரகசியமாய் வீட்டுக்குள் இருந்து பூசை முதலியவைகளை முடித்துப் பின்பே சாப்பிட வேண்டும். இந்தக் கொடுமைகளைத் தாங்க ஏலாது பரிசாதகத்திற்கு வந்த வடகலை வைஷ் ணவப் பிராமணர்களும் சமுசாரமும் பிள்ளைகளும் இந்தியாவுக்குப் போய் விட்டார்கள். நான் "வியாவில்" என்னும் இடத்தைவிட்டு "மணற்காடு" மாரி அம்மன் கோயிலடியில் வந்து இருந்தேன். மாரி அம்மன் கோயிலையும் இரண்டு முறை இடிக்க வந்தும் அம்மை நோயின் பயத்தால் இடிக்காமல் போய் விட்டனர்.

☙ என்னையும் பூசை செய்யப்படாதெனத் தடுத்தனர். நான் ஒரு நேரப் பூசை தவறினாலும் முத்துமாரி அம்மை வருவிப்பாள். அதற்குச் சாட்சி கோயிலிடிக்க வந்தபோது உங்களுக்குத் தெரியும். உங்களுக்கேயன்றி இங்கேயுள்ள மற்ற வர்களுக்கு அம்மை வந்ததில்லை. இந்தக் கோயிற் பூசைக்காகவே நான் இங்கே இருக்கிறேன். அல்லாவிடின் இந்த ஊரை விட்டுப் போய்விடுவேன் என்று சொல்ல ஒன்றும் பேசாது போய்விட்டார்கள்.

☙ பின் எனது மகனுக்கு விவாகம் செய்ய நினைத்து கீரிமலையிலே உள்ள எனது சகோதரியின் மகள் நாராயணி அம்மாளை விவாகம் முடித்துநானும் மகனுமாய்ப் பூசை செய்து வந்தோம். அந்தநாளில் மாரியம்மன் கோயிலைக்

கட்டிய முத்துத்தாண்டவ முதலியார் மகன் இராசரத்தின முதலியார் அவர் மகன் வரராசசிங்க முதலியாரால் எனது மகனுக்கு ஓர் உறுதி எழுதப்பட்டது.

௸ அவ்வுறுதி எப்படியெனில் 1749 ஆம் ஆண்டு பங்குனி மாதம் திங்கட்கிழமை பூருவபக்கத்திருதிகையும், சோதி நட்சத்திரமும் கொண்ட சுபமுகூர்த்தத்தில் எழுதிய சாசனத்தின் வாசகம்.

௸ மேற்குறித்த ஐயமார்களே தங்களிஷ்டப்படி இந்தக் கோயிலிலே புராணம் வாசிக்கவும் பூசை திருவிழா நடத்தவும் வேள்வி செய்யவும் அதிகாரமுடையவர்களாய் இருக்கிறார்கள். இக்கோயிலில் ஆதாரதனைக்காக வரும் பக்தர்கள் காணிக்கையாகக் கொடுக்கும் பணத்தை குறித்த ஐயமாரே ஏற்று அதை இக்கோயிலின் விருத்திக்காக உபயோகிக்கும் அதிகாரமுடையவர்களாக இருக்கிறார்கள். இவ்வதிகாரமானது இவருக்கும் இவர் சந்ததி உள்ளவரைக்கும் சூரிய சந்திரர் உள்ள வரைக்கும் வரராசிங்க முதலியாராகிய என்னால் தாமோதர ஐயருக்கு கொடுக்கப்பட்டது.

வரராசசிங்க முதலியார் கையொப்பம்

சாட்சிகள் 1. சங்கரன் சேதுவன்

2. சங்கரன் கதிர்காமன்

௸ இந்த உறுதி எழுதி முடிந்த சிறிது காலத்தின் பின் எனது மகனுக்குப் பிள்ளைகள் பிறந்தன. முதலாவது மகன் கண்டோ பண்டித ஐயர்.

௸ ஐந்து பிள்ளைகள் பிறந்தார்கள். எனது மூத்த பேரனுக்கு மேருகிரி ஐயருடைய வம்சத்திலே உள்ள கணபதி ஐயருடைய மகள் உமை அம்மாவை விவாகம் செய்து வைத்தேன் இவ்வளவும் கனக சாபாதிக்குருக்களாகிய என்னால் எழுதப்பட்டது. எனக்கு வயது எழுபத்திரண்டு.

௸ எனது பேரன் தாமோதர ஐயர் அவருடைய பிள்ளைகள் ஐந்து பேர். அவருடைய முதல் மகன் கண்டோ பண்டித ஐயராகிய நான் எனது தகப்பன்

மற்ற நால்வரில் இரண்டாவது மகன் புங்குடுதீவுக்கும் மூன்றாவது மகன் சுன்னாகத்துக்கும் நான்காவது மகன் அராலிக்கும் ஐந்தாவது மகன் இணுவிலுக்கும் போய்விட்டார்கள். எனது தகப்பன் காலத்திலே ஒல்லாந்தர் இராச்சியம் போய் இங்கிலீசு இராச்சியம் 1795 இல் வந்து விட்டது. எனது தகப்பனாருக்கு எனது பிரபிதாமகர் கனகசபாபதிக் குருக்கள் விவாகம் செய்து வைத்தார். எனது தகப்பனுக்கு நாலு பிள்ளைகள்.

(க) முத்தையா

(உ) இரங்கையர்

(ங) சுப்பையர்

(ச) தெய்வதயானை அம்மாள்

௸ எனது தகப்பனாகிய கண்டோ பண்டித ஐயர் முத்தையாவாகிய எனக்கு கோதாவரியிலே இருந்துவந்த மேருகிரி ஐயருடைய சந்ததியிலே உள்ள சுப்பையருடைய (க) மகள் இலட்சுமி அம்மாவையும் எனது தம்பி இரங்கையருக்கு (உ) மகள் பாறுவதி அம்மாவையும் எனது இரண்டாவது தம்பி சுப்பையருக்கு சுப்பையருடைய மகள் சானகி அம்மாவையும் எனது சகோதரி தெய்வதயானை அம்மாவுக்கு சுப்பையருடைய மகன் கதிரேச ஐயரையும் விவாகம் செய்து வைத்தார்.

௸ நான் விவாகம் செய்து (கரு) வருஷம் வரையில் பிள்ளையில்லாதிருந்து நான் வெகுமனத்துக்கமுடையவனாய் இருக்கும்போது திருச்செந்தூருக்குப் போய் கந்தஷட்டி விரதம் இருப்பதாக எனது தகப்பனாருக்கு அறிவித்தேன். அவர் எங்கள் சந்ததித் தலைவராகிய மங்களேஸ்வரக் குருக்கள் திரு உத்தரகோசமங்கையிலிருந்து வரும் போது அவ்விடம் வைத்துவிட்டு வந்த சுவாமியின் ஆபரணம் முதலிய சகல சாமான்களையும் எடுத்துக் கொடுத்துவிட்டு வரும்படியும் அவர் அங்கே மறைத்துவிட்டு வந்தமையால் இங்கே அவர்பட்ட கஷ்டம் முதலியவற்றையும் சிவசொத்து குலநாசம் என்பதற்கு சந்தேகமில்லை

என்பதையும் இன்னும் அனேக புத்திமதிகளையும் சொல்லி ஏட்டையும் தந்து எனக்கு வேண்டிய பொருளும் தந்து போய்வருமளவும் என்னோடு ஆட்களையும் தந்து எனக்கும் என் சமுசாரத்துக்கும் ஆசீர்வாதம் செய்து ஊர்காவற்றுறை வரைக்கும் எங்களோடு வந்து எங்களைக் கப்பலேற்றிவிட்டு வீட்டுக்குத் திரும்பினார்.

ஙு நாங்கள் பிரயாணமாய்ப் பாம்பன் வந்து பாம்பனிலே இறங்கி, இராமேசுரத்துக்குப்போய் அங்கேயுள்ள ஆரியப் பிராமணப் பிள்ளையை அழைத்துக் கொண்டு (கரு) மைல் தூரமுள்ள சேதுவையடைந்து, ஆரிய ரைக் கொண்டு சங்கற்பம் செய்வித்து தீர்த்த ஸ்நானம் செய்து இராமேசு ரத்தையடைந்து இராமாலிங்கப் பெருமானையும் பறுவதவர்த்தனி அம்மா ளையும் தெரிசித்து சேதுமாதவரையும் சேதுகாவலரையும் தெரிசித்து அவ்விடத் தில் ஐந்து நாளிலிருந்து ஐந்தாவது நாள் உவதீர்த்த ஸ்நானமும் கோடி தீர்த் தமும் ஸ்நானமும் செய்த ஆசாரியருக்கு என்னாலியன்ற தெட்சணையும் கொடுத்து அவரால் ஆசீர்வதிக்கப்பெற்று அந்த இடத்தை விட்டு நீங்கி மறுபடியும் பாம்பன் வந்து ஓடம் வழியாய் வெற்றிலை மண்டபம் சேர்ந்து திருப்புராணி தெற்பசயனம் போய் அங்கிருந்து பிரயாணமாய் உத்தரகோசமங்கையை அடைந்தோம்.

ஙு ஆதிசிதம்பரக் குருக்கள் வீட்டிலேயே விடுதி எடுத்து இருந்தோம். இருக் கும்போது ஆங்கேயுள்ள குருக்கமார்களுடைய சரித்திரத்தை விசாரித்தேன். ஆதிசிதம்பரக்குருக்கள் சொல்லுவது முன் முப்பத்திரண்டு வீட்டுக்காரர்கள் இருந்ததாகவும் இங்கே கலகம் நடந்தபோது பதினெட்டு வீட்டுக்காரர் இன்ன இடம் என்பது தெரியாற் போய்விட்டார்களென்றும் மறுபடி (கஉ) வீட்டுக்காரர் இருந்ததாகவும் அப்போது நான்கு வீட்டுக்காரர் இவ்விடத்தை விட்டு வெளிக்கிட்டு ஒருபகுதியார் கும்பகோணத்திற்கும் இன்னொரு பகுதியார் செருத்தணிக்கும் இரண்டு வீட்டுக்காரர் யாழ்ப்பாணமும் போய்விட்டார்களென்றும் இங்கே யுள்ளவர்கள் சொல்லுகிறார்கள். இப்போ இங்கே இருப்பவர்கள் ஏழு வீட்டுக்காரர்கள் என்பதாகவும் சொல்லி இதெல்லாவற்றையும் நீர் ஏன் விசா ரிக்கிறீர என்று என்னையும் கேட்டுவிட்டு என்னுடைய கோத்திர சூத்திரத்தை யும் விசாரித்தார். நானும் என்னுடைய கோத்திர சூத்திரத்தைச் சொல்லிச் செப்புப்

பட்டயத்தையும் எடுத்துக் காண்பித்தேன். அதன்பிற்பாடு அவர் என்னைத் தங் களோடு சமபந்தியாய் வைத்து போசனஞ் செய்தும் மிக்க மரியாதையும் வைத் திருந்தார்.

௸ நான் அங்கேயுள்ளவன் என்பதை அறிந்த பிற்பாடு அங்கேயுள்ள சனங்களுக்கு இருந்த சந்தோஷம் அளவில்லை. நான் கொண்டு போன ஏட்டையும் வாங்கிப் பார்த்து சுவாமியின் ஆபரணம் முதலிய சாமான்கள் இருக்கிற இடத்தையும் திறவுகோல்கள் வைத்த இடத்தையும் அறிந்து என்னை அச்சாமான்களை எடுத்துத் தரும்படி கேட்டார்கள்.

நானும் அதற்கு உடன்பட்டு முத்து இராமலிங்கம் என்னும் பெயரையுடைய சேதுபதி மகாராசாவை அழைப்பித்து அங்கேயுள்ள குருக்கள்மார் மற்றும் சனங்கள் எல்லோரையும் அழைப்பித்து மாங்களேசுவர சுவாமிக்கும், மங்க ளாம்பிகை அம்மனுக்கும் விஷேட பூசை அபிஷேகம் செய்த பிற்பாடு மகாமண் டபத்தில் ஈசானிய மூலையில் இருக்குந் தூணில் யானைக்காசு முத்திரை இருப்பதாகவும் அதுக்குள்ளே துவாரஞ்செய்து திறவுகோல் வைத்திருப்பதாகவும் ஏட்டிலே எழுதியிருக்கிறது என்பதை சேதுபதிக்கு அறிவித்து சேதுபதியும் நானும் அங்கேயுள்ள குருக்கள்மார் முதலிய எல்லோரும் மகா மண்டபத்தில் ஈசானிய மூலையில் இருக்குந் தூணுக்குச் சமீபமாகப் போய் தூணில் யானைக் காசு முத்திரை இருப்பதை எல்லோருமாகப் பார்த்து யானைக்காசு முத்திரையை நானேயுடைத்து அதன் மேல் அரக்கு மெழுகு எடுத்து அதன் மேல் திறகுகோலை எடுத்து மங்களேசுவரசுவாமி கோயிலில் தெற்குப் பக்கத்திலே இருக்கிற போக்கை அறிந்து அங்கே போய் போக்கைத் திறந்து போக்குக்குள்ளே எல்லாரும் போய் இரும்புப் பெட்டகத்தைத் திறந்தபோது அதற்குள்ளே சிறு தயிலாப்பெட்டி இப்பது கண்டு அதை எடுத்துத் திறந்து பார்க்கையில் தங்க ஆபணாங்கள், வெள்ளி ஆபணாங்கள், பதக்காங்கள் பழுதில்லாமல் இருக்கவும் எடுத்தேன். முத்து மாலைகளும் பட்டுக்களும் பழுதாய்விட்டன. குடை, கொடி, சுருட்டி முதலியவைகளும் பழுதாய்விட்டன. செப்பு, இரும்பு, பித்தளை, வெண்கலம் முதலிய சாமான்கள் பழுதில்லாமல் இருக்கவும் எடுத்தேன்.

எல்லாச் சாமான்களையும் சுவாமி சன்னிதானத்திற்கு கொண்டுபோய் நகை முதலியவைகளை சுவாமிக்குச் சாத்தி மகா உற்சவம் நடத்திய பிற்பாடு ஆபரணம் முதலிய சகல சாமான்களையும் சேதுபதிராசா முகதாவில் ஒப்படைக்கும்போது உமது முன்னோர் இருந்து நடத்தினபடியே நீரே இருந்து இந்தச் சாமான்களையும் வைத்துக்கொண்டு இருக்கும்படியாகவும் எமது பிள்ளைகளுக்குப் பூசைப்பங்கைத் தருகிறதாகவும் இராசாவும் குருக்கமாரும் கேட்டார்கள். இப்போ தம்முடைய பூசைப் பங்கை மற்றக்குருமார் செய்து தருவதாகவும் என்னைக் கேட்டார்கள். எமது பிள்ளைகளுக்குப் பூசைப் பங்கைத் தருகிறதாகவும் என்னைக் கேட்டார்கள். நானதற்குச் சொல்லியது யாத்திரை செய்வதாக வந்தேனேயன்றிப் பூசைப் பங்குக்காக வரவில்லை என்றும் இந்தச் சாமான்கள் நான் அறிந்துகொண்டு எடுத்துத் தராமற்போனால் எனக்கு மகாபாதகம் வருமென்றும் நான் சொன்னேன். சொல்லியதை எல்லோரும் ஒத்துக்கொண்டார்கள். இன்று முதலாக எனது பேருக்கு மாசம் மாசம் அருச்சனை செய்ய வேண்டும் என்று அதற்குரிய காசையும் கொடுத்து மறுபடியும் நாலைந்து நாள் அவ்விடத்திலிருந்து சுவாமி தரிசனஞ் செய்து கொண்டு அவ்விடத்தைவிட்டு பிரயாணமாகும்போது அங்கேயுள்ளவர்கள் என்னைவிட மனமில்லாதவர்களாயிருப்பதை அறிந்து மறுமுறை வருவதாகவும் இப்போ திருச்செந்தூருக்குப் போகிறதாகவும் அவர்களுக்குச் சொல்லி அவர்களைச் சந்தோஷப்படுத்தி அவர்களுடைய ஆசீர்வாதத்தையும் நான் பெற்றுக்கொண்டு அவ்விடத்தை விட்டு நீக்கித் திருச் செந்தூருக்குப்போய் அங்கேயுள்ள திரிசுதந்தரப்பிராமணர்களாகிய சுப்பையர் வீட்டில் விடுதி எடுத்து அவரை அழைத்துக்கொண்டு கோயிலுக்குப்போய் அவரைக்கொண்டு சங்கற்பஞ் செய்வித்து கந்தபுட்கரணி வதனாரம்பம முதலாகிய இருப்பத்திநாலு தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்து கோயிலுள்ளே போய் சுப்பிரமணியரையும் சண்முகரையும் தரிசித்து சங்கற்ப பூர்வமாய் ஸ்கந்த சஷ்டி விரதத்தை ஆரம்பித்து நானும் எனது சம்சாரமும் ஆறு நாளாய் உபவாசமிருந்தோம். ஆறுநாளுஞ் சென்ற பிற்பாடு அங்கே ஓர் மடங்கட்டுவிக்க வேணுமென்று நினைத்து பஞ்சிக் காட்டிலிருக்கும் தேவர் சந்ததியரில் ஒருவர் மாறலாய் கிரையத்திற்கு நிலம் வாங்கிச் சாதனம் நிறைவேறியபின் அந்த இடத்தில் ஒரு மடம் ஸ்தாபித்து அம்மடத்திற்கு திரிசுதந்திரப் பிராமணரில் ஒருவராகிய சுப்பையரை தம்பதி சமேதரராய் அந்த மடத்திலிருத்தி மடத்தைத் தருமசாதனஞ்

செய்து கோயிலுக்கு அருச்சனைக் கட்டளை வைத்து சண்முகரையும் சுப்பிரமணியரையும் தரிசித்து அவ்விடத்தைவிட்டு நீங்கி திருப்பெருங்குன்றம் வந்து சண்முகப்பெருமான் திருமணக்கோலத்தைக் கண்டு தெரிசித்து பேரானந்தத்தை அடைந்து அவ்விடம்விட்டு நீங்கி மதுரைக்குச் சென்று சோமசுந்தரக் கடவுளையும் மீனாட்சியையும் கண்டு தெரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கி சீரங்கத்தை அடைந்து அரங்கப் பெருமானைத் தரிசித்து அவ்விடத்தைவிட்டு நீங்கி திருவானைக்காவை அடைந்து ஜம்புகேசுரரையும் அகிலாண்டேசுவரியையுங் கண்டு தெரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கி வைத்தீஸ்வரர் கோயிலுக்குப் போய் வைத்தீசுரரையும் வாலாம்பிகையையும் தரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கி சீர்காழிக்குப் போய் பிரமபுரீசுரரையும் தோணியப்பரையும் சட்டநாதரையும் திருஞானசம்பந்தருக்கு ஞானப்பாலூ ட்டிய பிரதிபுமைங்கண்டு தெரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கி சிதம்பரம் போய் நடராசர் சன்னிதானத்தை அடைந்து நடராசரையும் மாணிக்கவாசகருடைய மோக்ஷமாகிய இரகசியத்தையும் கண்டு தரிசித்து கனகசபாபதியையும் படிகலிங்கத்தையும் தரிசித்து மறுபடி ஆகாசலிங்கத்தையும் உமையம்மை யாரையும் சிவகாமியையும் தரிசித்து தில்லைக்காளியையும் இளமையினார் கோயிலுக்குப்போய் அங்கேயுள்ள சுவாமிகளையும் தரிசித்து தீக்ஷிதரால் அன் னம் அளிக்க அன்னத்தை புசித்து அவ்விடத்தில் பத்து நாளிருந்து அவ்வி டத்தை விட்டு நீங்கி இராமநாதபுரம் வந்து சேதுபதி மகாராசவை அடைந்து மகாராசாவால் மரியாதை செய்யப்பெற்று, அவர் கொடுத்த பட்டுப் பீதாம்பரம் ரூபாய் இவைகளையும் பெற்றுக்கொண்டு அவருக்கு ஆசீர்வதித்து அவரிடம் விடைப்பெற்றுக்கொண்டு இராமநாதபுரத்தை விட்டு நீங்கி மறுபடியும் உத் தரகோசமங்கைக்குப் போய் அங்கே நாலுநாளிலிருந்து அங்கேயுள்ள குருக் கள்மார்களோடு விருந்து சாப்பிட்டு அவர்களைச் சந்தோஷப்படுத்தி மங்க ளேசுவரரையும் மங்களாம்பிகையும் தெரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கும் போது அங்கே உள்ளவர்கள் சந்தோஷமாக எங்களுக்கு ஆசீர்வாதம் செய்து அனுப்பினார்கள்.

௸ பாம்பன் வந்து கப்பலேறி ஊர்காவற்றுறை வந்து கப்பலை விட்டிறங்கி களபூமியிலே இருக்கின்ற எனது தகப்பனார் வீட்டுக்குப்போய் அவர்களால் நாங்களெல்லோரும் ஆசீர்வதிக்கப்பெற்று இந்தியாவுக்குப் போய்வந்த சரித்தி

ரம் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லியும் தகப்பனார் வீட்டிலேயே கொஞ்சநாளிருந்து மறுபடி மணற்காட்டில் உள்ள எனது வீட்டுக்குவந்து இருந்தேன். இப்படி ஆறு வருஷம் திருச்செந்தூருக்குப் போய் கந்தஷட்டி விரதத்தை அனுஷ்டித்து ஆறாவது வருஷத்தில் சண்முகப்பெருமான் சந்நி தானத்தில் விரதம் உத்தியாபனம் செய்து முடித்து வீடு வந்து சேர்ந்தேன். சொற்பகாலம் சென்றபின் இந்தியாவுக்குப் போய் அநேக ஸ்தலங்களைக் கண்டு தரிசித்து திருப்பெருந்துறைக்குப் போய் அங்கே மாணிக்கவாசகருக்கு உபதேசம் செய்த இடத்தைப் பார்த்து அங்குள்ள திருப்பணி விஷேசத்தையும் மடந்தைநாதரையும் யோகாம்பிகையையும் தரிசித்து அவ்விடத்தில் சில நாள் தங்கி அங்கேயுள்ள விநோதங்களைப் பார்த்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டு பிரயாணமாய் வேதாரணியம் வந்து சுவாமி தரிசனம் செய்து கோடிக்கரைக்கு வந்து முத்துமீனாட்சி என்னும் படகில் பிரயாணமாய் ஊர்காவற்றுறையை அடைந்து மணற்காடு என்னும் பதியில் அக்கிரகாரத்தை அடைந்து முதி யோர்களை நமஸ்கரித்து இளையோர்களை ஆசீர்வதித்து இருந்தேன்.

☙ சிறிது காலத்திற்குப் பின் எங்கள் முதியோரால் ஸ்தாபிக்கப்பட்ட முத்து மாரி அம்மை ஆலயம் பழுதாயிருப்பதை அறிந்து அதைப் புதுப்பிக்க நினைத்து இலங்கையிலே அநேக இடங்களுக்குச் சென்று காசு வாங்கிவந்து திருப்பணி வேலை செய்து மூலமூர்த்தி, உற்சவமூர்த்திகளை ஸ்தாபனம் செய்து துவாசரோகணத் திருவிழா வேள்வி முதலிய சிறப்புகளும் வெகுசிரத்தை யுடனும் மன அன்பாயும் நடத்தி வருகிறேன்.

☙ முத்தையருடைய பிள்ளைகள் இராமசாமி ஐயர் குமாரசாமி ஐயர், சினிஐயர் என்னும் மூவர் இராமசாமி ஐயருடைய மகன் சுந்தரரேசுவர ஐயர் இவருடைய மகன் சரவணபவக்குருக்கள் இவருடைய வரலாறு.

☙ 1864 ஆம் ஆண்டில் ஜனனமான சிவஸ்ரீ சு.சரவணபவக்குருக்கள் அவர்கள் காரைநகர் கார்திகேயப்புலவர் வடலியடைப்புவேலுப்பிள்ளை உபாத்தி யாயர் ஆகியோரிடம் கல்வி கற்றார். வியாவில் ஐயனார் கோயிலிலும் மணற்காடு மாரியம்மன் கோயிலிலும் பூசகராக இருந்தபின்னர் ஈழத்துச் சிதம்பரம் என வழங்கும் காரைநகர் சிவன்கோயிலில் பூசகராகக் கடமையாற்றினார்.

இந்தியாவிலுள்ள வைத்தீஸ்வரன் கோயிலுக்குச் சென்று அங்கே ஆசாரி அபிஷேகம் செய்யப்பெற்றார். சிவன் கோவிலில் துவஜாரோகணம் முதலிய நைமித்திய கிரியைகளையும் செய்து இவர்...ஆண்டில் சிவபதமடைந்தார்.

ஙக இவருடைய ஆறு பிள்ளைகளுள் ஒருவர் சிவஸ்ரீ ச.கணபதீஸ்வரக் குருக்கள் அவர்கள். 1888.08.10 ஆம் திகதி ஜனனமான இவர் காரைநகர் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் தமிழையும் காரைநகர் இ.முருகேச ஐயர் , துணைவி அப்பாத்துரைக் குருக்கள், வடலியடைப்பு அருணாசல சாஸ்திரிகள், கந்தரோடை வைத்தியநாத சாஸ்திரிகள் அல்வாய் இராமலிங்கக் குருக்கள் ஆகியோரிடமும் சமஸ்கிருதத்தையும் கற்றார். 1915 இல் காஞ்சிபுரத்தில் சிவஸ்ரீ சிவசுப்பிரமணியக்குருக்கள் அவர்களால் ஆசாரியாபிஷேகம் செய்யப்பெற்ற இவர் ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்தின் பிரதம சிவாசாரியராக 64 ஆண்டுகள் பணி புரிந்தார். இத் தேவஸ்தானத்தின் உயிராய் உள்ளமாய் உணர்வாய் இருந்து அரும்பணியாற்றிவர் இவர். தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் ஈழத்துச் சிரம்பரேஸ்வரனுக்கு அர்ப்பணித்தவர்.

ஙக ஈழத்துச் சிதம்பரத்தில் இவர் செய்த வேத ஆகம நெறி தவறாத கிரியை களும் வேறு பல ஆலயங்களில் செய்வித்த கிரியைகளும் பல்லாயிரக் கணக் கானோரின் பாராட்டைப் பெற்றன.


ஙக அகில இலங்கைச் சைவ சமய குருமார் சபையின் தலைவராகப் பதின் நான்கு ஆண்டு கடமையாற்றிய கணபதீஸ்வரக் குருக்கள் அகில இலங்கைச் சிவப்பிராமணச் சங்கம், அகில இலங்கைப் பிராமண குரு சமூக சேவா சங்கம், அகில இலங்கைக் குருப்பிரம்ம வித்தியார்த்தி சபா, ஈழத்துச் சிதம்பரம் திருப்பணி சபை, காரைநகர் மணிவாசகர் சபை ஆகியவற்றின் போஷ கராகவும் இருந்தார்.

ஙக 1962 ஆம் ஆண்டில் இவருடைய மகத்தான சமயப் பணிகளைப் பாராட்டும் வகையில் அகில இலங்கைச் சைவசமயக் குருமார் சபையும் சைவாபிமானிகளும் இணைந்து இவருக்குப் பொன்னாடை போர்த்தி பொற்பதக்கம் சூட்டி "வேதாகம கிரியா பூஷணம்" என்ற பட்டத்தையும்


வழங்கினார். அகில இலங்கைக் குருப்பிரம்ம வித்தியார்த்தி சபையினரால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் வேதாகம பாடசாலை இவரின் பெயரால் கணபதீஸ்வர குருகுல வித்தியாலயம் என வழங்கப்படுகின்றது.

ශ 1967 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 13 ஆம் திகதி சிவஸ்ரீ கண தீஸ்வரக்குருக்கள் ஈழத்து சிதம்பரேஸ்வரனின் திருவடி நிழலை அடைய தேவஸ்தானத்தின் பிரதம சிவாச்சாரியராக சிவஸ்ரீ க.மங்களேஸ்வரக் குருக் கள் (தியாகராசக் குருக்கள்) பணியாற்றி வந்தார்.

## அமரர் கலாநிதி க.வைத்தீசுவரக்குருக்கள்



இளமையில்



முதுமையில்

# வைத்தீசுவரக்குருக்கள் வாழ்க்கை வரலாறு

**தந்தை : ச.கணபதீஸ்வரக் குருக்கள்**

**தாய் : க.சிவயோகசுந்தராம்பாள்**

**பிறப்பு : 1916-09-22, காரைநகர்**

**மனைவி : வை.சாரதாம்பிகை**

**கல்வி**

**ஆரம்பக் கல்வி : காரைநகர் வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை**

**இடைநிலைக் கல்வி : காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை**

**கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி ( V.S.L.C. பரீட்சை)**

**ஆசிரியர்கள் – பண்டிதர் ச.பஞ்சாட்சரக் குருக்கள்**

**பண்டிதர் சி.சுப்பிரமணிய தேசிகர்**

**ஆங்கிலக் கல்வி : காரைநகர் இந்து ஆங்கிலப் பாடசாலை**

**(தற்போது காரைநகர் இந்துக் கல்லூரி, கலாநிதி ஆ. தியாகராசா ம.வி.)**

**அளவெட்டி நாகபூஷணி வித்தியாலயத்தில் (தற்போது அருணோதயாக் கல்லூரி)**

**கல்வி கற்று சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி**

சுன்னாகம் பிராசீன பாடசாலையில் சமஸ்கிருதமும் தமிழும் படித்து சமஸ் கிருதத்தில் பிரவேச பண்டிதர் பரீட்சையிலும், தமிழில் பால பண்டித பரீட்சை யிலும் சித்தி பெற்றார். இக்காலப் பகுதியில் சனி, ஞாயிறு நாள்களில் சுன்னாகம் குமாரசாமிப் புலவரின் மாணவராகிய வித்தகர் ச.கந்தையாபிள்ளையிடம் சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் சிலவற்றைக் கற்றார். அப்போது மகாவித்துவான் சி.கணேசய்யரிடம் தமிழ் இலக்கணத்தை முறையாகக் கற்றார்.

பரமேஸ்வர பண்டித ஆசிரிய கலாசாலையில் கற்று 1939 ஆம் ஆண்டில் பயிற்றப்பட்ட ஆசிரியரானார். அதே சமயம் பண்டிதர் பரீட்சையிலும் சித்தி பெற்றார்.

அத்துடன் முன்னாள் செனேட்டர் அ.நடேசபிள்ளை அவர்களிடம் தர்க்கசாத்திரம் கற்றார்.

### ஆசிரியப் பணி

1940 ஆம் ஆண்டு கொழும்பு விவேகானந்தா வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியைத் தொடங்கி நாட்டின் பல்வேறு பாகங்களிலும் பணியாற்றி 1971 இல் ஓய்வுபெற்றார். தமிழ் நாட்டைச் சேர்ந்த பண்டிதர் ப.இராமநாதபிள்ளையிடம் சைவசித்தாந்தம் தொடர்பான சந்தேகங்களை கொழும்பு விவேகானந்த வித்தி யாலயத்தில் ஆசிரியப் பணி மேற்கொண்ட (1940) காலப் பகுதியில் கேட்டு தெளிவ டைந்தார்.

### ஏனைய பணிகள்

கொழும்பு விவேகானந்த சபையினரால் நடத்தப்பட்ட அகில இலங்கை சைவசமய பாடப் பரீட்சைக்கான குழுவில் உறுப்பினராக இருந்து வினாத்தாள் தயாரித்தல் பணிகளில் பங்குபற்றினார். 1940 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வெலிக்கடை மஹரகம சிறைச்சாலைகளில் உள்ள சைவத் தமிழ் கைதிகளுக்கு நற்போதனை வழங்கினார்.

1940 இல் மாலை நேரங்களில் தினகரன் நாளிதழில் பணியாற்றினார்.

யோகர் சுவாமிகளின் ஆசியுடன் 1.1.1940 இல் காரைநகர் மணிவாசகர் சபையை தொடக்கினார். பின்னர் 1960 இல் தமிழ் வளர்ச்சிக் கழகத்தைத் தொடக்கி நடத்தினார்.

மணிவாசகர் சபை, மார்கழித் திருவாதிரை, திருவெம்பாவை நாட்களில் ஈழத்துச் சிதம்பரம் (காரைநகர் சிவன் கோவில் வசந்த மண்டபத்தில்) மணிவாசகர் விழாவினை 1955 முதல் ஆண்டுதோறும் நடத்தி வருகின்றது. இன்றுவரை கடந்த 75 (1940 - 2015) ஆண்டுகளாக இச்சபை இயங்கி வருகின்றது. 1955 இல் தொடங்கப்பெற்ற முதலாவது மணிவாசகர் விழாவில் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ

சி.கணேசய்யர் நந்திக்கொடி ஏற்றித் தொடக்கி வைத்தார். அப்போது கைத்தொழில் சமூக சேவைகள் அமைச்சராக இருந்த சேர் கந்தையா வைத்தியநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார். அன்று தொடக்கம் ஆண்டுதோறும் நடைபெறும் மணிவாசகர் விழாவில் தமிழ் நாட்டிலிருந்தும் எமது நாட்டிலிருந்தும் சைவ, தமிழ் அறிஞர்கள் கலந்துகொண்டு திருவாசகம் பற்றிய அரிய பல கருத்துக்களைச் சொல்லி வருகிறார்கள்.

1970 இல் இச் சபையினர் அப்போது நடைபெற்ற மணிவாசகர் விழாவில் தற்போது அமரரான தங்கம்மா அப்பாக்குட்டிக்கு **'சிவத்தமிழ்ச்செல்வி'** என்ற பட்டமளித்து சிறப்பித்தனர். அம்மையாருக்கு பல பட்டங்கள் பின்னர் கிடைத்த போதிலும் மணிவாசகர் சபையினர் வழங்கிய இப் பட்டமே பெரிதும் பயன்படுத்தப்பட்டது.

### மணிவாசகர் சபையினரின் பணிகள்

கோட்ட மட்டத்தில் சமய பாடத் தேர்வுகள் நடத்தி சித்தியடையும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் நடைபெறும் மணிவாசகர் விழாவில் தங்கப் பதக்கங்களும், பரிசில்களும், பாராட்டுப் பத்திரங்களும் வழங்கி வருகின்றனர்.

அத்துடன் திருவெம்பாவை மணிவாசகர் மலர் (1960), திருவாசகம், திருவாதிரை, மார்கழிச் சிறப்பு போன்ற விடயங்கள் தொடர்பாக திருவெம்பாவை உரை, திருவாதிரை மலர்கள் போன்றவற்றை வெளியிட்டுள்ளதுடன் மணிவாசகர் சபை பொன்விழா மலர், வெள்ளிவிழா மலர், பவள விழா மலர் என்பவற்றையும் வெளியிட்டுள்ளனர்.

1960 இல் அமைக்கப்பட்ட காரைநகர் தமிழ்வளர்சிக்கழகத்தின் மூலம் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா.தரம்), உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கட்கு தமிழ்மொழிப் பகுதி ஒன்றுக்கான மாதிரி வினாக்கள் அடங்கிய பத்திரங்களை வெளியிட்டு மாணவர்கட்கு உதவினார். அத்துடன் இக் கழகத்தின் சார்பில் பல நூல்கள் பதிக்கப்பட்டு (1974 -1975) வெளியிடப்பட்டன.

1974 இல் க.பொ.த. (சா.த) தமிழ் மொழி - பகுதி 1

மதிப்பீட்டுப் பயிற்சி

இல.1, இல.2 25.5 1974 இல், இல.3 26.6.1974 இல், இல.4 25.7.1974 இல் இல.5 25.9.1974 இல், இல.6 10.10.74 இல், இல.7 25.10.1974 இல், இல.8 10.11.1974 இல், இல.9 24.11.1974 இல்

வெளியிடப்பட்டது.

இதேபோல "தமிழ் இலக்கிய விளக்கம்" என்ற நூல் ஐயன்னா என்பவரால் தயாரிக்கப்பட்டு தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் வெளியிடப்பட்டது.

**இவரால் பதிப்பிக்கப்பட்ட நூல்கள்**

- ஈழத்துச் சிதம்பரம் ஆசிரியர் ச.கணதீபஸ்வரக் குருக்கள். 1 ஆம் பதிப்பு 1960 ஆம் ஆண்டு
- 2 ஆம் பதிப்பு 2002 ஆம் ஆண்டு

- ஈழத்துச் சிதம்பர புராணம், - 1971 ம் ஆண்டு ஆசிரியர் நவாலியூர் புலவர் மணி சோ.இளமுருகனார் உரையாசிரியர் பண்டிதர் இ.பரமேஸ்வரியார்

- ஐயனார் புராணம் ஆசிரியர் பண்டிதர் க.மயில்வானனார் - 2012

- திருவாதிரை மலர்கள்

- 1 ஆம் புத்தகம் 1964 , 2 ஆம் புத்தகம் - 1965 வெளியீடு.

• 3 ஆம் புத்தகம் 1983, • 4 ஆம் புத்தகம் 1984, • 5 ஆம் புத்தகம் 1985

• காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் வெளியிடப்பட்ட நூல்கள் -26

• காரைநகரில் சைவசமய வளர்ச்சி - ஆசிரியர் சிவத்திரு. க.வைத்தீசுவரக்குருக்கள்

• திண்ணபுர அந்தாதி - ஆசிரியர் காரைநகர் கார்த்திகேயப் புலவர்- 1975

• உரையாசிரியர் - செஞ்சொற்கொண்டல் சொ.சிங்காரவேலன் தமிழ்நாடு

• தன்னை அந்தாதி (காரைநகர் கிழக்கு தன்னை பிள்ளையார் மேல் பாடப்பட்டது)

ஆசிரியர் காரை கார்த்திகேயப் புலவர் 1819 - 1898

உரை பண்டிதர் க.மயில்வாகனம் 1975 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது

• திருப்போசை வெண்பா (காரைநகர் மேற்கு கருங்காலி முருகமூர்த்திமேல் பாடப்பட்டது) ஆசிரியர் காரை கார்த்திகேயப் புலவர் (1819 -1898)

உரை வை.கா.சிவப்பிரகாசம் M.A

• திக்கை அந்தாதி ஆசிரியர் காரை கார்த்திகேயப் புலவர் (காரைநகர் கிழக்கு

திக்கரை முருகன் மேல் பாடப்பட்டவை) (1819 -1898)

• திருமுறைப் பெருமை ஆசிரியர் கந்தர்மடம் சுவாமிநாத பண்டிதர் 1980

• நன்னூற் காண்டிகை உரையும் நாவலர் பெருமானும்

ஆசிரியர் மகாவித்துவான் F.X.C. நடராசா

• தெரிநிலை வினையெச்சம் : ஆசிரியர் மகாவித்துவான் F.X.C. நடராசா

• வினைத்தொகை : ஆசிரியர் மகாவித்துவான் F.X.C. நடராசா

• நாவலர் பிள்ளைத் தமிழ் : ஆசிரியர் பண்டித வித்துவான் மு.கந்தையா B.A (இந்நூல் சாகித்திய மண்டல பரிசு பெற்றது)

• க்ஷேத்திரத் திருவெண்பா : ஐயடிகள் காடவர்கோன் நாயனரால் பாடப்பெற்றவை. உரையாசிரியர் பண்டிதர். வித்துவான் மு.கநதையா B.A

• அருள் நெறித் திரட்டு - காரைநகர் ச.சபாபதி

• தொடர் மொழிப் பொருளுக்கு ஒரு சொல்

• எதிர்சொற் கோவை

• பாரத இதிகாசத்தில் வரும் பாத்திரங்களின் குணவியல்பு

• முப்பது கட்டுரைகள் அடங்கிய கட்டுரைக் கோவை

• க.பொ.த. (சா.த) மாணவர்களுக்கான தமிழ்மொழி பகுதி 1 இற்கான மாதிரி வினாத்தாள் (ஆண்டு 1970 -1990)

• ஈழத்துச் சிதம்பரம் புராணச் சுருக்கம்

• திருவெழுகூற்றிருக்கை

இவற்றைவிட 25.04.1993 இல் காரைநகர் சைவமகாசபை பொன் விழா மலர் (1940- 1990) காரைநகர் வியாவில் ஐயனார் கோவில் கும்பாபிஷேக மலர், (1970 ஆம் ஆண்டிலும்) 1998 ஆம் ஆண்டிலும் நடைபெற்ற ஈழத்துச்சிதம்பர கும்பாபிஷேகத்தின் போது வெளியிடப்பட்ட மலர்களில் பல அறிஞர்களின் கட்டு ரைகளை தமிழ் நாட்டிலும் நமது நாட்டிலும் பெற்று வெளியிட்டார்.

காரைநகர் மணிவாசகர் சபை வெள்ளி விழா மலர் (1979), பொன்விழா மலா. (1993) என்பனவும் இவரால் வெளியிடப்பட்டவை

**இவர் பெற்றுள்ள பட்டங்கள் சில**

12,13.10.2002 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் தத்துவக் கலாநிதி (Doctor of Philosophy (honoris causa) பட்டம் பெற்றார்.

1972 இல் வெளிவந்த நூல்களில் இவரால் பதிப்பிக்கப்பட்ட ஈழத்துச் சிதம்பர புராணம் நூலுக்கு சிறந்த முடிப்பினை உடைய நூல் என்று 1974 ஜனவரி 29 ஆம் திகதி இலங்கைத் தேசிய நூல் அபிவிருத்திச் சபையால் பாராட்டப்பட்டு சான்றிதழ் அளிக்கப்பட்டது.

1995 இல் இலங்கை கம்பன் கழகம் பொன்னாடை போர்த்தி "மூதறிஞர்" என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்ற மூத்த கலைஞர்கள் கௌரவிப்பின்போது 18.11.2001 "கலை ஞான கேசரி" - பல்துறை பட்டம் வழங்கி கௌரவித்தது

இந்து சமய கலாசார விவகார அமைச்சு , இவர் தத்துவக் கலாநிதி (Doctor of Philosophy) பட்டம் பெற்றதைப் பாராட்டி 2002 ஜூன் 22, 23, 24 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற ஆய்வரங்கின் போது இந்து சமய மேம்பாட்டுக்கும் ஆன்மீகத்துறைக்கும் இவர் ஆற்றிய சேவையை பாராட்டிக் கௌரவித்தனர்.

4.11.2007 இல் சர்வதேச இந்துமதக் குருமார் ஒன்றியம் 'சிவாகம கிரியா பூஷணம்' பட்டம் வழங்கி கௌரவித்துது.

2008 இல் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடந்த கலை, இலக்கிய விழாவில் 19.7.2008 இல் 'கலைஞானகேசரி' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கனடாவில் உள்ள சைவசித்தாந்த மன்றம் இவரின் சேவைகளை பாராட்டி 22.09.2002 இல் வைத்தீஸ்வர மலர் வெளியிட்டுக் கௌரவித்தது.

திருவாவடுதுறை ஆதினம் (தமிழ்நாடு) 4.2.2006 விருது வழங்கிக் கௌரவித்தது.

இவர் தன்னிடமிருந்த 5000 இற்கும் மேற்பட்ட நூல்களில் பலவற்றை முதலில்

காரைநகர் மணிவாசகர் சபையினரிடம் கையளித்து தனது தந்தையாரின் பெயரில் காரைநகர் சம்பந்தர் கண்டியில் கணபதீஸ்வரக் குருக்கள் நூல் நிலையத்தை அமைத்தார். 1990 இன் பின் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இவருடைய வீட்டி லிருந்த பல நூல்கள் காணாமற்போய்விட்டன.

2004 தொடக்கம் தன் இறுதிக்காலம் வரை தன்னிடமிருந்த எஞ்சிய நூல் களை மகாராணி சோமசேகரம் அவர்களிடம் கையளித்தார். அவர் காரைநகர் வியாவில் ஐயனார் கோவிலில் புதிய கட்டடம் அமைத்து இவருடைய நூல் களையும் ஏனைய நூல்களையும் சேர்த்து "கணபதீஸ்வரக் குருக்கள் நூல் நிலையம்" அமைக்கப்பெற்று இன்றும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இவருடைய சைவத் தமிழ் தொண்டுகளைப் பற்றி 2003 இல் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவி தனது பட்டத்தை பெற இதனைச் சமர்ப்பித்தார்.

ஐயா நடராசப்பெருமான் மீது அளவு கடந்த பக்தி கொண்டவர். காரைநகர் சிவன் கோவிலில் அமைந்துள்ள நடராசப்பெருமானின் திருக்கோலத்தில் அவர் திருநாவுக்கரசு நாயனார் பாடிய

குனித்தபுருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் - கண்டு மெய்மறந்து அனுபவிப்பார்.

ஆனி உத்தரத்தின் போதும் மார்கழித் திருவாதிரையின் போதும் நடராசப் பெருமானுக்கு அபிடேகம் நடந்து முடிந்த பின்னர் அம் மூர்த்தியை பார்ப்பதில் அவருக்கு அதிக ஆர்வம் இருந்தது. இந்த நடராசப்பெருமானின் திருமூர்த்தம் அமைந்துள்ள விதத்தை மிகவும் பெருமையாகப் பேசுவார். இத் திருக்கோலத்தில் உள்ள பதஞ்சலி வியாக்கிரபாதர் மற்றும் திருவாசியில் அமைந்துள்ள 52 சுடர்களும் சேர்ந்து அமைந்திருப்பது போன்ற நடராஜர் திருக்கோலம் தமிழகத்தில் ஒரிரு இடங்களில் மட்டுமே இருப்பதாக 1962 இல் நடந்த மணிவாசகர் விழாவில் உரையாற்ற வந்த தமிழக அறிஞர் தொ.மு.பாஸ்கரதொண்டைமான் தனது

உரையில் தெரிவித்தார்.

இவருடைய முன்னோர் திருவுத்தரகோச மங்கையிலிருந்து வந்தவர்கள் என்பதாலோ என்னவோ மாணிக்கவாசகப் பெருமானில் அளவிறந்த பக்தி கொண்டவர். நடராசப் பெருமானையும் அவரைப் போற்றிப் பாடிய மணிவாசகப் பெருமானின் புகழையும் சகல மக்களும் அறியவேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டு அதற்காகவே 1.1.1940 இல் காரைநகர் மணிவாசகர் சபையை தவத்திரு யோகர் சுவாமிகளின் ஆசியுடனும், ஏனைய சில அன்பர்களின் உதவியுடன் அமைத்தார். 1955 இல் முதலாவது மணிவாசகர் விழாவை காரைநகர் சிவன் கோவில் வசந்தமண்டபத்தில் நடத்தினார். பின்னர் வருடந்தோறும் ஈழத்திலும் தமிழகத்திலிருந்தும் பேரறிஞர்களை அழைப்பித்து மார்கழி திருவாதிரை காலத்தில் மணிவாசகர் விழாவை நடத்தினார். அச் சபையின் மூலம் முதலாவது திருவாதிரை மலரை வெளியிட்டார். அதன் மூலம் மக்களுக்கு திருவாசகத்தின் பெருமையையும் மணிவாசகரின் அருமையையும் அறிய வைத்தார். வளர்ந்து வரும் மாணவர்கள் திருவாசகத்தை அறிய வேண்டும் என்பதற்காக மாணவர்களுக்கு திருவாசகப் போட்டிகளை நடத்தினார். இந்த வகையில் கடந்த 75 ஆண்டுகளாக உயிர்த்துடிப்புடன் இயங்கிவரும் மணிவாசகர் சபை தொடர்ந்தும் மணிவாசகப் பெருமானின் பெருமையை மக்கள் அறியச் செய்வதில் தன் பணியை ஆற்றி வருகிறது. இந்த வகையில் அப்பூதி அடிகள் நாயனார் எப்படி திருநாவுக்கரச நாயனாரின் பெருமையைப் புலப்படுத்த திருநாவுக்கரச நாயனார் தண்ணீர்ப் பந்தல் போன்றவற்றை அமைத்தாரோ அதேபோல இவரும் மணிவாசகர் சபையை அமைத்து மணிவாசகர் பெருமையை யாவரும் அறியச் செய்தார்.

தனக்கு தமிழ் கற்பித்த புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் கோவிலின் குருவாகவும், மிகச் சிறந்த தமிழ் பேரறிஞராக விளங்கியவரும், தொல்காப்பியக் கடல் எனப் போற்றப்பட்டவருமான மகாவித்துவான் சி.கணேசய்யர் அவர்களிடம் அளவிறந்த பக்தியும் மரியாதையும் கொண்டவர். ஒருமுறை இலங்கையில் இருந்து தமிழகம் சென்ற அன்பர்கள் மதுரைத் தமிழ்ச்சங்க பண்டிதர்களிடம் உரையாடிய போது, அவர்கள் இலங்கையில் கணேசய்யர் சுகமாக இருக்கிறாரா என்று கேட்டதை எனது தந்தையார் அடிக்கடி கூறுவார்.

அந்த அளவுக்கு தமிழகத்தில் அறிந்திருந்த ஒரு தமிழ்ப் பேரறிஞராக விளங்கிய மகாவித்துவான் கணேசய்யாவை அவர் என்றும் நினைத்து உருகுவார்.

அதுபோல, இவரின் இளமைக் காலத்தில் யோகர்சுவாமிகள், அடிக்கடி இவருடைய பேரனாரான அமரர் சிவஸ்ரீ சு.சரவணபவக் குருக்களிடம் காரை நகருக்கு வந்து போனதன் காரணமாக அவரிலும் இவருக்கு மிகுந்த பக்தி ஏற்பட்டுள்ளது. ஆரம்ப காலத்தில் 'யாரம்மா அந்த தாடிக்கார கிழவன்?' எனத் தனது தாயாரிடம் தான் வினவியதாகவும் அவர்தான் யோகர்சுவாமிகள் என தாயார் கூறியதாகவும் சொல்லுவார். அதன் பின்னர் அவரைத் தனது குருவாகக் கொண்டவர். இளமைக் காலத்தில் யோகர் சுவாமிகளே இவரின் வழிகாட்டியாக இருந்தார்.

மகாவித்துவான் சி.கணேசய்யாவிடம் பயின்ற காரணத்தாற் போலும் இவர் தமிழின் மீது அளவிறந்த பற்றுக்கொண்டிருந்தார். இலக்கண வழியில் தமிழ்மொழியை சிதையாமல் பாதுகாக்க வேண்டும் என்பதில் அதிக ஆர்வம் காட்டினார். தமிழ் நூல்களிலும் கட்டுரைகளிலும் இலக்கண வரம்புகள் மீறப் படுவதை கண்டு கவலைப்படுவார். தன்னைச் சந்திக்க வருபவர்களிடம் அது பற்றி அதிகமாக எடுத்துச் சொல்வார். இலக்கண மரபுகள் பேணப்பட வேண்டும் என்பதற்காகவே 'தமிழ் வளச்சிக்கழகம்' தொடங்கி சில நூல்களை வெளியிட்டார். அந்த வகையில் தமிழ் மாணவர்களுக்காக இவரால் வெளியிடப்பட்ட தமிழ் நூல் கள் 1970 - 1990 காலப்பகுதிகளில் தமிழ் மாணவர்களின் நன் மதிப்பினைப் பெற்றிருந்தன.அத்துடன் தமிழிலும் தமிழ் இலக்கண மரபுகளிலும் மாணவர்கள் கவனம் செலுத்துவதை ஊக்குவித்தன.

தமிழ் மொழியில் இவருக்கிருந்த பற்று எல்லோரும் அறிந்த ஒன்று. அந்த வகையில் தமிழ்ப் புத்தகங்களை சேகரித்து வைத்திருந்தார். புத்தகங்கள் என்று வரும்போது அவர் குடும்பத்தையே மறந்துவிடுவார். குடும்பத்தில் ஒரு இழப்பு ஏற்பட்டாலும் தாங்கிக்கொள்ளுவார். அதேநேரத்தில் புத்தகங்களை இழந்தால் தாங்கிக்கொள்ளமாட்டார். 1992 அளவில் காரைநகருக்கு இராணுவத்தினர் வந்தபோது இவர் சேகரித்து வைத்திருந்த அரிய தமிழ் புத்தகங்கள் பலவற்றை அழித்து விட்டனர். பல அரிய நூல்கள் கிழித்து வீசப்பட்டிருந்ததைக் கண்டு மிகவும்

கவலைப்பட்டார். மிகுந்திருந்த நூல்களை தேடி எடுத்து இடம்பெயர்ந்து தான் சென்ற இடங்கள் எல்லாம் அவற்றையும் மிகவும் கஷ்டப்பட்டு கொண்டு சென்றார். கரவெட்டி, வட்டுக்கோட்டை, கந்தரோடை, இருபாலை போன்ற இடங்களில் இடம்பெயர்ந்து வாழ்ந்தபோதும் தாம் வைத்திருந்த நூல்களை பாதுகாக்க வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். இந்த வகையில் இவரை நான் குங்குலியக்கலய நாயனாருடன் ஒப்பிட்டுப் பார்த்ததுண்டு. எதை இழந்தாலும் இறைவனுக்கு விளக்கேற்றுவதை விடாமற்செய்து வந்தவர் குங்கிலியக்கலய நாயனார். அதேபோல, எதை இழந்தாலும் தனது புத்தகங்களை இழக்க விரும்பமாட்டார். இவர் தனது கடைசிக் காலத்தில் தான் சேகரித்து வைத்திருந்த நூல்களை எதிர்காலச் சந்ததியினருக்குப் பயன்பட வேண்டும் என்ற நோக்கில் காரைநகர் வியாவில் ஐயனார் கோயிலில் தமது தந்தையாரின் பெயரில் அமைந்துள்ள கணபதீஸ்வரக் குருக்கள் நூல் நிலையத்தில் வைத்துள்ளார்.

தமிழ் அறிஞர்களை, பண்டிதர்களை வித்துவான்களை வாழும்போதே கௌரவிக்க வேண்டும். அவர்களின் புலமையை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பதில் நவாலியூர் சோ. இளமுருகனார் அவர்களின் புலமையை பயன்படுத்தி காரைநகர் சிவன்கோவில் வரலாற்றைக் கூறும் "ஈழத்துச் சிதம்பர புராணம்" பாடுவித்தார். அவரின் துணைவியார் பண்டிதை பரமேஸ்வரி அம்மை யாரைக் கொண்டு அப்புராணத்துக்கான உரையை எழுதுவித்தார். அதையடுத்து வட்டுக்கோட்டை புலவர் க.மயில்வாகனனார் அவர்களைக் கொண்டு காரைநகர் மக்களின் காவல் தெய்வமாக வீற்றிருக்கும் ஆண்டிகேணி ஐயனாருக்கு 'ஐயனார்புராணம்' பாடுவித்தார். தமது காலத்தில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களைக் கொண்டு கட்டுரைகளைப் பெற்று, பல நூல்களை வெளியிட்டார். அந்த வகையில்

திருவாதிரைமலர்கள் ( 5 நூல்கள்)

மணிவாசகர் சபை வெள்ளி விழா மலர் - 1979

மணிவாசகர் பொன்விழா மலர் - 1993

சைவக்களஞ்சியம் - 2013 போன்ற நூல்களைக் குறிப்பிடலாம்.

காரைநகரில் 1819 – 1898 வரை வாழ்ந்த சி.கார்த்திகேயப் புலவர் அவர்களால் பாடப்பட்ட பாடல்களை பிரசுரம் செய்தார்.

திண்ணபுர அந்தாதி, தன்னையமக அந்தாதி, திருப்போசைவெண்பா போன்ற நூல்கள் அவ்வாறு வெளியிடப்பட்டன.

தனது காலம் முழுவதும் தமிழ் அறிஞர்களிடம் உரையாடுவதிலும் அவர்களின் புலமையை மக்கள் அறிந்துகொள்ளச் செய்வதிலும் மிகுந்த ஈடுபாடுள்ளவராக இருந்தார். எந்த ஊரிலிருந்து ஒருவர் வந்தாலும் அவர்களின் ஊரில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களைப் பற்றி விசாரிப்பார். ஏழாலை பண்டிதர் மு.கந்தையா அவர்களின் சைவசித்தாந்த அறிவை மிகவும் மெச்சுவார். தமது இறுதிக் காலத்தில் தமிழ் அறிஞர்களுடன் கலந்துரையாடுவதில் பெருமகிழ்ச்சி கொண்டார். பல்கலைக்கழக மாணவர்கள் தமது ஆய்வுத் தேவைக்காக வரும்போது தன்னிடம் உள்ள நூல்களைக் கொடுத்து உதவுவதிலும், தேவையான ஆலோசனைகளை வழங்குவதிலும் அவர்களுக்கு தேவைப்படும் நூல்கள் தன்னிடம் இல்லாவிடில் அவற்றை யாரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்ற தகவலையும் வழங்குவார். தனது காலப் பகுதியில் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவந்த பத்திரிகைக் குறிப்புகளையும் பேணிவந்த இவர், அவற்றைத் தேவையானவர்களுக்கு வழங்குவதுடன் இக்கா லத்தவரும் அறியக் கூடியதாக மறுபிரசுரம் செய்வதை ஊக்குவித்தார்.

தமிழ் அரசியல் துறையிலும் இவர் ஈடுபாடுள்ளவர். தம்மைக் காண வருபவர்களிடம் அதுபற்றி அடிக்கடி உரையாடுவார். தமிழ் மக்களிடம் ஒற் றுமை இல்லையே என தனது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். அவர்கள் ஒற்றுமைப்பட்டு கடந்த 2500 ஆண்டு காலமாக இலங்கையில் செழிப்புற்றிருக்கின்ற தமிழ், தான் வாழ்ந்த காலப் பகுதியான 1930 களிலிருந்து சற்று நலிவடைந்ததாக உணர்ந்து எதிர்காலத்திலும் எம் தமிழ் தொடர்ந்து இந்த நாட்டில் செழிப்பாகவும் வளத்துடனும் மக்களின் வாழ்க்கை மொழியாக இருக்க, தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்ற தமது ஆதங்கத்தை தன்னை சந்திக்க வரும் அனைவரிடமும் வற்புறுத்திக் கூறுவார்.

தனது தமையனாரான அமரர் க.மங்களேஸ்வரக் குருக்களிடம் (தியாகராசக்

குருக்கள் என காரைநகர் மக்களால் மிகவும் அன்பாக அழைக்கப்பட்டவர்.) மிகுந்த அன்பும் மரியாதையும் வைத்திருந்தார்.

எனது தந்தையாருக்கு தமிழ் மீது இருந்த மிகுந்த அளவற்ற பற்றையும் தமிழ் புத்தகங்களில் அவர் காட்டிய அதீத அக்கறையையும் கண்ட எனது நண்பர்கள் எனது இளமைக் காலத்தில் ஐயா உங்கள் தந்தையாரையும் தாயாரையும் புத்தகசாலைக்கு சேர்ந்து செல்லவிடாதீர்கள். ஏனென்றால் அவர் வரும்போது புத்தகங்களை மட்டும் எடுத்துவருவார். உங்கள் தாயாரை கடையில் விட்டுவிட்டு, மறந்துபோய் வந்துவிடுவார் என வேடிக்கையாகச் சொல்வார்கள் அந்தளவுக்கு தமிழ் நூல்கள் மீது அளவற்ற பற்று வைத்திருந்தார்.

**காரைநகர் சிவன் கோயிலுக்கும் இரண்டு [2] என்ற எண்ணுக்கும் பல தொடர்புகள் இருக்கின்றன.**

இக்கோயிலின் மூல மூர்த்திகள் இரண்டு

1. சுந்தரரேஸ்வரப் பெருமான்
2. ஆண்டிகேணி ஐயனார்.

கோவிலின் தர்மகத்தாக்கள் இருவராகவே இருப்பர்.

கோவில் இரண்டாம் வீதியில் அடுத்துஅடுத்து இரண்டு கிணறுகள் உள்ளன.

எமது தந்தையார் தனது தகப்பனார் கணபதீஸ்வரக் குருக்களையும் தமைய னாரான மங்களேசுவரக் குருக்களையும் இரு கண்களாக போற்றினார்.

சைவத்தையும் தமிழையும் தன் கண்களாகப் போற்றியவர்.

புத்தகங்களையும் புதினப் பத்திரிகைகளையும் பேணிப் பாதுகாத்தார்.

தம் குருவாகப் போற்றியவர்கள் இருவர்.

மகாவித்துவான் சி.கணேசையர்
தவத்திரு.யோகர் சுவாமிகள்

எமது சிவன் கோவில் என காரைநகர் மக்களால் மட்டுமே அறியப்பட்டிருந்த திண்ணபுரம் சிவன் கோவிலில் வீற்றிருக்கும் நடராஜ மூர்த்தியை தமிழகத்தின் சிதம்பரத்தில் வீற்றிருக்கும் நடராஜமூர்த்தியின் வடிவமாகக் கண்டு இக் கோயிலுக்கு **"ஈழத்துச் சிதம்பரம்"** எனப் பெயர் சூட்டி மகிழ்ந்ததுடன் தனது தந்தையார் கணபதீஸ்வரக் குருக்களைக் கொண்டு இக்கோவிலின் தல வரலாற்றைத் தொகுத்து 1961 இல் "ஈழத்துச் சிதம்பரம் என்ற பெயரில் நூல் வெளியிட்டு உறுதிப்படுத்தினார். ஈழத்துச் சிதம்பரம் இன்று உலகப் பிரசித்தி பெற்ற ஒரு கோவிலாக விளங்கி வருவது யாவரும் அறிந்ததே.

இவ்வளவு பெருமை வாய்ந்த இத்திருத்தலம் பிரதான வீதியில் இருந்து தொலைவில் இருப்பதால் சர்தாரண மக்களும் இலகுவில் சென்று வழிபடக் கூடியதாக பொதுப் போக்குவரத்து வசதிகள் இல்லாமல் இருப்பதைக் கண்டு மனம் வருந்தினார். சயம்பு வீதியால் கோயிலுக்குச் சென்று புதுறோட் வழியாக மீண்டும் பிரதான வீதியை அடையக் கூடியதாக இவ்விரு வீதிகளும் சீரமைக்கப் பட்டு பொதுப் போக்குவரத்து வாகன வசதிகள் செய்யப்பட வேண்டும்.

மார்கழி திருவெம்பாவை காலத்தில் மட்டுமன்றி சாதாரண நாட்களிலும் மக்கள் இக் கோயிலில் வீற்றிருக்கும் நடராஜ மூர்த்தியை தரிசித்து தான் பெற்ற இன்பம் அவர்களும் பெற வேண்டும் என மிகவும் விரும்பினார். அதற் கமைய எதிர்காலத்தில் இவ்விரு பாதைகளும் சீரமைக்கப்பட்டு யாழ்ப்பாணம் - காரைநகர் பேரூந்து சேவைகள் நாள்தோறும் இத்திருக்கோயிலை தொட்டுச் செல்லக் கூடியதாக வசதிகள் செய்யப்பட வேண்டும் என விரும்பினார். அவரின் வீதிக் கனவுகளை எதிர்காலத்தில் காரைநகர் மக்கள் நிச்சயமாக நிறைவேற்றி வைப்பார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

### *அவர் தம் பிள்ளைகளுக்கு இறுதி நேரத்தில் கூறிய வார்த்தைகள் பற்றி அவர்கள் கூறுவது,*

'திருவாசகம் கேட்க இனிமையாக இருக்கிறது'

திருவாசகத்தை வானொலியில் பாடவிடு. நிற்பாட்ட வேண்டாம். விடியும்-வரை பாடட்டும். திருவாசகம் பாடுவது கேட்கிறதா? என்று கேட்டபொழுது "ஓம்" கேட்கிறது. கேட்க இனிமையாக இருக்கிறது என்றார்.

மகன்- சச்சிதானந்தன்.

## நான் யோகர் சுவாமிகளிடம் செல்லப்போகிறேன்

23.04.2015 அன்றிரவு 12 மணியளவில் படுக்கையில் இருந்து எழுந்து வந்து தான் இருக்கும் கதிரையில் இருந்தார். ஏன் இருக்கிறீர்கள்? என்று கேட்டேன். ஸ்ரீயிடம் ஓட்டோ கொண்டுவருமாறு கூறினேன் என்றார். இப்பொழுது நள்ளிரவு எங்கே போகப்போறீர்கள் என்று கேட்க யோகர் சுவாமிகள் என்னைத் தன்னுடைய மடத்தில் வந்திருக்கட்டாம். நான் செல்லப்போகிறேன் என்று சொல்லி நீண்ட நேரம் அமர்ந்திருந்தார். மறுநாள் வெள்ளிக்கிழமை (24.04.2015) மதியம் "இப்பொழுது எங்கே இருக்கிறேன்?" என்று கேட்டார். நான் கந்தரோடையில் மருகர் இராசாவுடன் இருக்கிறீர்கள் என்றேன். இல்லை எனக் கூறி. தான் யோகர் சுவாமிகள் மடத்தில் யோகர் சுவாமிகளிடம் கதைத்துக்கொண்டு இருக்கிறேன் என்று கூறி உனக்கு ஒன்றும் விளங்காது நீ எழுந்து போ என்றார். சிறிது நேரத்தின் பின்னர் இங்கே வா என்று கூப்பிட்டு இராசாவிடம் போய் (சிற்பி சிவசரவணபவன்) அன்றைக்கு ஒரு சொல்லுக்கு விளக்கம் கேட்டவன். நான் மாறிச் சொல்லி விட்டேன் சரியான கருத்தை நாளைக்கு சொல்லுகிறேன் என்று சொல்லும் படி கூறினார். மருமகன் சிற்பி சரவணபவனிடம் மிகுந்த பற்றுக்கொண்டவர். சிறிது நேர அமைதிக்குப் பின்னர். நான் முடிவு எடுத்துவிட்டேன் என்றார். என்ன முடிவு என்று கேட்க புத்தகங்களை மகாராணி சோமுவிடம் கொடுக்கப் போகிறேன் என்றார். பின்னர் துவாரகனை

கூப்பிடு என்றார். துவாரகன் போய் விட்டார் என்று சொன்னேன். துவாரகனிடம் ஒரு புத்தகம் கொடுத்தேன். அதைத் திருப்பி தரவேண்டாம் என்று சொல்லிவிடு. அவருக்கு இன்னும் இரண்டு புத்தகங்கள் கொடுக்க வேண்டும். இப்பொழுது இயலாமல் இருக்கிறது என்றார். பிறப்புண்டேல் இறப்புண்டு. இரா.செல்வவடிவேல் ஓம் ரீவியில் பேசிக்கொண்டிருக்கிறார். நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன் நீ குழப்பாதே போ என்றார். கதைத்துக் கதைத்துக் கொண்டே பிள்ளைகள் நாம் மூவரும் அருகில் இருக்க அவருடைய ஆன்மா அமைதியாகப் பிரிந்து ஆனந்த நடராஜனின் ஆனந்தஜோதியில் கலந்துவிட்டது. எனது தந்தையார் அடிக்கடி எங்களுக்குக் கூறுவார் எங்களால் செய்யக் கூடிய உதவிகளை மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும். சாதி, மதம், இனபேதம் பார்க்காமல் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும். எவருடைய மனமும் நோகாதபடி கதைக்க வேண்டும். அவர் கற்றுத் தந்த நன்னெறிகளின் படி நாம் வாழ்வதே அவருக்கு நாம் செய்யும் கைம்மாறு ஆகும். நான் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் அவருக்கு மகளாகப் பிறக்க வேண்டும் என்பதே என்னுடைய பெரு விருப்பம் ஆகும்.

- மூத்த மகள் - வைத்தீசுவரக்குருக்கள் இராணி

23.04.2015 அன்று நான் பாடசாலைக்கு செல்ல ஆயத்தமான பொழுது புலவர் சோ.இளமுருகனாரின் புதல்வர் பாரதிக்கு டாக்டர் பாரதிக்கு சோமசுந்தரப்புலவர் பற்றிய கட்டுரை ஒன்று அவுஸ்திரேலியா வுக்கு அனுப்ப வேண்டும். முத்திரையும் கடித உறையும் வாங்கிக் கொண்டு வா என்றார். நான் வாங் கிக் கொண்டு வந்து மாலை 3 மணிக்கு கொடுத்தேன். அப்பொழுது 10.05.2015 ஞாயிறன்று ஈழத்துச் சிதம்பரத்தில் எங்களுடைய சிவன் கோயிலில் நடராசர் அபிஷேகம் செய்ய வேண்டும். நாங்கள் தானே ஒவ்வொரு வருடமும் செய்கிறோம். நீங்கள் சென்று செய்வியுங்கள் எனக்கும் நடராசாரைப் பார்க்க ஆசையாக இருக்கிறது. ஆனால் நானும் உங்களோடு வருவதற்கு இயலா மல் இருக்கிறது என்று கூறி மனம் வருந்தினார். அவருடைய விருப்பத்தை நடராசப் பெருமான் நிறைவேற்ற விரும்பினார். அன்றிரவு "ஓம்" தொலைக் காட்சியில் ஈழத்துச் சிதம்பர நடராசப் பெருமானின் ஆருத்திரா தரிசன அபிஷேக நிகழ்வுகளை ஒளி பரப்பினார்கள். அதனைப் பார்த்து அவர் அடைந்த மகிழ்ச்சி அள விட

முடியாது. "நீ என்னைப் பார்த்து தரிசிக்க முடியாமல் இருக்கிறாய் என்று தானே கவலை அடைந்தாய். அதனால் நானே உனது இல்லத்துக்கு "ஓம்:" தொலைக் காட்சி வழியாக வந்து காட்சி அளித்துவிட்டேன் என்று கூறுவது போல் அந்தச் சம்பவம் அமைந்திருந்தது....

இளையமகள் - வைத்தீசுவரக்குருக்கள் சாவித்திரி.

## பணியுமாம் என்றும் பெருமை

வைத்தீசுவரக்குருக்கள் ஆளுமைமிக்க தமிழ் அறிஞர். அவர் அதை அறிந்திருந்தும் ஒரு சிறிதும் உணர்ந்து கொள்ளாதவராக - He was aware of his scholaship but was not conscious of it.- என்பதற்கு இணங்க அடக்கம், பணிவு, பண்பு, இன்சொல் முதலியவற்றின் சின்னமாக வாழ்ந்தவர். "பணியு மாம் என்றும் பெருமை" என்ற குறளின் இலக்கணத்துக்கு இலக்கியமாகத் திகழ்ந் தவர்.

காரைநகர் பண்டிதர் ச.பஞ்சாட்சர சர்மா, பண்டிதர். சி.சுப்பிரமணியதேசிகர், உளவியல் அறிஞர் க.சிவப்பிரகாசம், மகாவித்துவான் சி.கணேசையர். பண்டித மணி க.சு. நவநீதகிருஷ்ண பாரதியார், வேதவிசாரத பி.வி. சிதம்பரசாஸ்திரி கள் முதலானோரிடம் கற்றதனால் அவர்களிடம் உள்ள நல்ல குணங்களை தானே பின்பற்றி தன் வாழ்க்கையை அமைத்துக்கொண்டவர்.

யாழ்ப்பாணத்து ஆன்மீக விளக்கு தவத்திரு. யோகர் சுவாமிகளிடம் இவர் பக்தி பாராட்டினார். காரைநகரில் இவர் மணிவாசகர் சபையை தொடங் கிய போது யோகர் சுவாமிகள் சொன்ன "வேண்டத் தக்கது அறிவோய் நீ" எனத் தொடங்கும் மணிவாசகத்தையே வழிகாட்டி வாக்கியமாகக் கொண்டார். மணிவாசகர் சபை மூலம் காரைநகர் திருவாதிரை உற்சவத்தின் போது இலங்கை இந்திய தலை சிறந்த சொற்பொழிவாளர்களை வரவழைத்து சொற்பொழிவுகள் நிகழ்த்து வித்தார். சொற்பொழிவாளர்களுடன் தொடர்பு கொள்ளுவது அவர்களை வர வேற்று உபசரிப்பது அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வது எல்லா வற்றுக்கும் முன் நிற்கும் இவர். எந்தவொரு விழாவிலும் பேசவில்லை என்பது

குறிப்பிடத்தக்கது.

எத்தனையோ நூல்களை இவர் அச்சேற்றி உள்ளார். அவற்றுள் மூன்று நூல்கள் குறிப்பிடத்தக்கது. தன் தந்தையார் கணபதீஸ்வரக்குருக்கள் எழுதிய "ஈழத்துச் சிதம்பரம்" என்ற நூல் வெளிவந்த பின்னரே கோவிலின் பெயர் ஈழத்துச் சிதம்பரம் ஆனது. புலவர் மணி இளமுருகனாரின் "ஈழத்துச் சிதம்பர புராணம்" தல புராணங்களுள் சிறந்ததாக மதிக்கப்படுகிறது. கந்தர்மடம் சுவாமிநாத பண்டிதர் எழுதிய "திருமுறைப் பெருமை" வேதங்களுக்குச் சமமாக திருமுறைகள் இருப்பதை நிரூபிக்கின்றது. இவை மூன்றும் தவிர்ந்த ஏனையவைகள் எல்லாமே தம்மளவில் தனிச் சிறப்புமிக்கவை தான்.

மௌனத் தவ முனிவர் பொ.கைலாசபதி, தென்கோவைப் பண்டிதர் ச.கந்தையாபிள்ளை ஆகியோரிடம் அளவிலா மதிப்பு வைத்திருந்தவர். கம்பன் கழகம் ஜெயராஜின் பணிகளை மனம் திறந்து பாராட்டுபவர். ஆறு. திருமுருகனின் சேவைகள் இக்காலத்துக்கு இன்றியமையாதது என்பார். இக்காலத்து இலக்கணம் தெரிந்தோருள் இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர், F. X.C நடராசா பண்டிதர் நடராசன், பண்டிதர் வீரகத்தி, பண்டிதர் நாகலிங்கம் போன்றோரை மரபுக் கவிஞர்களுள் புலவர் மணி இளமுருகனார் பண்டிதர் க.மயில்வாகனனார், பண்தர் க.சச்சிதானந்தன், வி.சிவராஜசிங்கம் ஆகியோர் குறிப்பிடக் கூடியவர்கள் என்பார். ஏழாலை பண்டிதர் மு.கந்தையா அவர்களின் சைவ சித்திதாந்த அறிவை மெச்சுவார்.

உளவியல் அறிஞர் சிவப்பிரகாசம் , பண்டிதர் மகாலிங்கசிவம் ஆகியோர் ஒரு நூலாவது எழுதவில்லை என்பதும் ஆரிய திராவிட பாஷாஅபிவிருத்திச் சங்கத்தின் மூலம் இணையற்ற தமிழ் தொண்டும் சமஸ்கிருத தொண்டும் செய்த யா.தி.சதாசிவ ஐயர் அவர்களைப் பற்றி ஒரு நூலாவது வெளிவரவில்லை என்பதும் இவரது ஆதாங்கம் ஆகும்.

தம்மைப் பிறர் பாராட்ட வேண்டும், புகழ்ந்துரைக்க வேண்டும் என்ற விருப்பு எதிர்பார்ப்பு எதோ ஓர் அளவிலே ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. சிலரிடம் வெளிப்படையாகவும், சிலரிடம் அடங்கியும் இருக்கிறது. உயர் பதவி,

பெருஞ் செல்வம், ஆடம்பரவாழ்க்கை போன்றவை தமக்கு புகழைத் தரும் என்று சிலர் கருதுகின்றனர். பணத்தை பகிரங்கமாக வாரி வழங்குவதன் மூலம் "வள்ளல்" என்ற பாராட்டுக்கு உரியவராகலாம் என்பது சிலரின் நம்பிக்கை. தம்மைத் தாமே விளம்பரப்படுத்துவது தன் புகழைப் பரப்புவதாக சிலருக்குத் தெரிகின்றது. கௌரவப் பட்டங்கள், பாராட்டு விழாக்கள் போன்றவை புகழை அதிகரிக்கும் சாதனங்களாக சிலருக்கு தோன்றுகின்றன. புகழ் என இவர்கள் கருதுவது இலக்கியம் கூறும் புகழ் என்பதிலிருந்து வேறுபட்டது.

மதிப்பிற்கு உரியவர், மகத்தானவர், தன்னலமற்றவர், பணிவும் பண்பும் நிறைந்த சாதனையாளர் என பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பாராட்டப்படும் சிறப்பே புகழாகும். உள்ளத்தாற் பொய்யா தொழுகி, உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உள்ளாகும் இச்சிறப்பு உண்மை, தூய்மை, நேர்மை, முதலாம் நற் பண்புகளை அடிப்படையாகக் கொண்டது.

உலக நடை அறிந்து ஏனையோருக்கு உதவும் பயன் கருதாது பணி புரிதல் அல்லவை நீக்கி நல்லவை செய்தல் மற்றையோரின் நிலையும் நோக்கமும் தேவையும் அறிந்து அவற்றுள் தர்ம நியாயமானவற்றை நிறைவு செய்வதற்கஆக தன் கல்விச் செல்வத்தையும் பொருட் செல்வத்தையும் பயன்படுத்தல் போன்ற பணிகளை தேடி புகழ் வரும் என்பது உரை ஆசிரியர்கள் பலரின் கருத்து.

வைத்தீசுவரக் குருக்களைத் தேடி பாராட்டுக்கள், பொன்னாடைகள், கௌரவ விருதுகள் எல்லாம் வந்தன. இவர் அவற்றைத் தேடிப் போகவில்லை. பல்கலைக் கழக கௌரவ கலாநிதி பட்டம் கூட பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்களினதும் மற்றும் பேராசிரியர்கள் பலரினதும் முன்முயற்சியே காரணமாக அமைந்தது. குருக்கள் புகழைத் தேடாதிருக்க அவரைத் தேடி புகழ் வந்தது. அதனால் தான் இன்றும் எம்மத்தியில் ஓங்கி உயர்ந்து நிற்கின்றார்.

- சி.சிவசரவணபவன். (சிற்பி)



# சிவபுராணம்

## (திருப்பெருந்துறை)

திருச்சிற்றம்பலம்

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன்
திருவாசகமென்னுந் தேன்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள் மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி

மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லாவினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற வித்தாவர சங்கமத்துள்
எல்லா பிறப்பும் பிறந் திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தக ன்றநுண்ணி யனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானமில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னையகல் விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்கு வாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே

மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்தப் பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்றசோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்றப் பெருங்க ருணைப் பேராறே
ஆராவ முதேயள விலாப் பெம்மானே
ஓராதாரு ள்ளத்தொ ளிக்கும் ஒளியானே
நீராயு ருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே யுள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனேய ந்தம்நடு வாகியல் லானே
ஈர்த்தென்னையாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமி லாப்புண்ணியனே
காக்கும் எங்காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறி வாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதேயு டையானே
வேற்றுவி காரவிடக் குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்துவினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென் பாண்டிநா ட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்துசொல் லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்





# திருப்பள்ளியெழுச்சி

திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே!
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற்று அண்ணலங் கண்ணாம்
திரள்நிறை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லே பள்ளி எழுந்தரு ளாயே

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவ நற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரியாய் எமக் கெளியாய்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே

இன்னிசை வீணையர் யாழினர், ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர், ஒருபால்
தொழுகையர், அழுகையர், துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே

பூதங்கள் தோறும் நின்றாய்எனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம் உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே

பப்பற வீட்டிருந்து உணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தார் அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா!
செப்புறு கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப்பு அறுத்துஎமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கெழுந்தருளும்
மதுவளர் பொழில்சூழ் திருஉத்தர கோச

மங்கையுள் ளாய் திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளுமாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் னடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி,
அந்தணன் ஆவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தே பள்ளி எழுந்தரு ளாயே

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொருளே உன் தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய் வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தே! கரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்! உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

புவனியில் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் னலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியில் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்!
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

திருச்சிற்றம்பலம்



# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேஎன்னே
ஈதே எம்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடை திறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்தாட்கொண்டாற்பொல்லாதோ
எத்தோ நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.

ஒண்ணித் தில நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோ ம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடை திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்(று)
ஓலமிடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறா யின்னுந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை யாமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பவாய்.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையால் குடைந்து குடைந்து உன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான் பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற் போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்(று)
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம் கேள்
எம்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருவாசகம்

**(ஐயா விரும்பிப் படிக்கும் பாடல்கள்)**

## திருச்சதகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து (உ)ன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து (உ) ன்னைப் போற்றி சயசய போற்றி யென்னுங்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டுகொள்ளே.

நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுதிந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீா் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம் முடையானே

யான்ஏதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்(கு) என்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேன்ஏயும் மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமான் எம்,
மானேயுன் னருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே.

ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
மோமான்நின் திருக்கோயில் தூகேன்மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்

கோனாகி யான் என தென்(று) அவர் அவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவேன்.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை யாண்டாய்க் (கு)
உள்ளந்தாள் நின்று உச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாங்
கண்ணிணையும் மரமாம் தீவினையி னேற்கே.

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்(டு)
ஆழ்கின்றாய், ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடு(உ)னக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே

சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தெனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்க்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோன் என்னையும் வந் தாண்டு கொண்டான்

யாமார்க்கும் குடியல்லோம் யாதும் அஞ்சோம்.
மேவினோம் அவன்அடியார் அடியா ரோடு
மேன்மேலும் குடைந்தாடி யாடு வோமே.

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோற லறிலைசெய்வதொன் றறியேனே.

மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையைஎம் மதியிலி மடநெஞ்சே
தேறுகின்றிலம் இனியுனைச் சிக்கெனச் சிவனவன் திரள் தோள்மேல்
நீறுநின்றது கண்டனை யாயினும் (ம்) நெக்கிலை இக்காயம்
கீறு கின்றிலை கெடுவதுன் பரிசிது கேட்கவும் கில்லேனே.

மேலை வானவ ரும்அறி யாதோர்
கோல மேயெனை ஆட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேஇவை வந்துபோங்
கால மேஉனை என்று கொல் காண்பதே

யானே பொய்என் நெஞ்சும் பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந் துறுமாறே.

மாறி லாதமாக் கருணை வெள்ளமே
வந்து முந்திநின் மலர்கொள் தாளிணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
மெய்ம்மை அன்பருன் மெய்ம்மை மேவினார்
ஈறி வாதநீ எளியை யாகி வந்
தொளிசெய் மானுடமாக நோக்கியுங்
கீறி லாதநெஞ் சடைய நாயினேன்

கடையன் ஆயினேன் பட்ட கீழ்மையே.

வான நாடரும் அறியொ ணாதநீ
மறையி லீறும்முன் தொடரொ ணாதநீ
ஏனை நாடருந் தெரியொ ணாதநீ
என்னை யின்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடு வித்தவா
உருகி நான் உனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய வையகத் துடைய இச்சையே.

பாடவேண்டும் நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக் (கு)
ஆட வேண்டும் நான் போற்றி அம்பலத்
தாடும் நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டும் நான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டும் நான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே.

## நீத்தல் விண்ணப்பம்

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்விறல் வேங்கையின் தோல்
உடையவ னே மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக்கொள்ளே.

## திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும்வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து

போதார் அமளியின்மேல் நின்றும் புரண்(டு) இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

## திருஅம்மானை

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலமன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாள்தா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆள்தான் கொண்டாண்டவா பாடுதுங்காண் அம்மானாய்.

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்ட
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழைபுரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை எங்குஞ் செறிந்தானை யன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை

ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

### திருக்கோத்தும்பி

நானார்என் உள்ளமார் ஞானங் ளார்என்னை யாரறிவார்
வானோர் பிரான்என்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊனார் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ.

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

### திருத்தெள்ளேணம்

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டு கொண்டான்
ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் (கு) ஆயிரந்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ.

### திருச்சாழல்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

### திருப்பூவல்லி

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்(து)

இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

## திருப்பள்ளியெழுச்சி

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந்துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே.

## கோயில் திருப்பதிகம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே.

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்

திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே.

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும் நீயல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான் இதற் கிலன்ஓர் கைம் மாறே.

## அடைக்கலப்பத்து

வழுங்குகின் றாய்க்குன் அருளார் அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேன்என் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர்பருகத் தந்துய்யக் கொள்ளாய்
அழுங்குகின்றேன் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே.

## அருட்பத்து

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை

பாதியே பரனே பால்கொள்வெண் நீற்றாய்
பங்கயத் தயனும்மா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
தெந்துவே என்றரு ளாயே.

## பிரார்த்தனை பத்து

கலந்து நின்னடியா ரோடன்று வாளா களித்திருந்தேன்
புலர்ந்து போன காலங்கள் புகுந்து நின்ற திடர்பின்னாள்
உலர்ந்து போனேன் உடையானே உலவா இன்பச் சுடர்காண்பான்
அலந்து போனேன் அருள்செய்யாய் ஆர்வங் கூர அடியேற்கே.

## குழைத்தபத்து

**வேண்டத் தக்க தறிவோய் நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ**
**வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி என்னைப் பணிகொண்டாய்**
**வேண்டி நீயா தருள் செய்தாய் யானும் அதுவே வேண்டின் அல்லால்,**
**வேண்டும் பரிசொன்றுண்டென்னில் அதுவும் உன்தன் விருப்பன்றே.**

அன்றே என்தன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட் கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே.

## பிடித்தபத்து

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்

எங்கெழுந் தருளுவ தினியே.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே
பெருந்திறல் அருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருப்புலம்பல்

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்

குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

## யாத்திரைப்பத்து

தாமே தமக்குச் சுற்றமும்தாமே தமக்குவிதி வகையும்
யாமார் எமதார் பாசமார் என்ன மாயம் இவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும் அவன்தன் குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப் புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே

அடியார் ஆனீர் எல்லீரும் அகல விடுமின் விளையாட்டைக்
கடிசே ரடியே வந்தடைந்து கடைக்கொண்டிருமின் திருக்குறிப்பைச்
செடிசே ருடலைச் செலநீக்கிச் சிவலோகத்தேது நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன் தன் பூவார் கழற்கே புகவிடுமே.

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின் புயங்கள்தாளே புந்திவைத்திட்(டு)
இகழ்மின் எல்லா அல்லலையும் இனியோர் இடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச் சென்று சிவன்தாள் வணங்கிநாம்
நிகழும் அடியார் முன்சென்று நெஞ்சம் உருகி நிற்போமே.

நிற்பார்நிற்க நில்லாவுலகில் நில்லோம் இனிநாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாந் திருமேனிப் புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாந் தாழாதே நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்ற பேழ்கணித்தால் பெறுதற் கரியன் பெருமானே.

## திருப்படையாச்சி

கண்க ளிரண்டும் அவன்கழல் கண்டு களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென் வாழ்வுகடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப்பாதம் இரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல் பயின்றிடும் ஆகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள் பாடுதும் ஆகாதே

விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படும் ஆகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படும் ஆயிடியே.

## ஆனந்தமாலை

கெடுவேன் கெடுமா கெடுகின்றேன் கேடி லாதாய் பழி கொண்டாய்
படுவேன் படுவ தெல்லாம்நான் பட்டாற்பின்னைப் பயனென்னே
கொடுமா நரகத் தழுந்தாமே காத்தாட் கொள்ளுங் குருமணியே,
நடுவாய் நில்லா தொழிந்தக்கால் நன்றோ எங்கள் நாயகமே.

## அச்சோப்பதிகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

திருச்சிற்றம்பலம்

# 6 வயது சிறுமிக்கு ஐயா எழுதிய கடிதம்

அவரது 99 ஆவது பிறந்தநாளன்று அவருக்கு வம்சினி சிவகுமார் என்ற ஆறு வயதுச் சிறுமி தனது பிஞ்சுக்கரங்களால் ஐயாவுக்கு எனது பிறந்த நாள் வாழ்த்துக்கள் என்று எழுதிக் கடிதம் அனுப்பியிருந்தார். அதனைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தார். எதிர்காலத்தில் இக்குழந்தை கெட்டிக்காரியாக இருப்பாள் என்று ஆசீர்வதித்தார்.அதனுடன் விடாமல் அந்தக் குழந்தைக்குப் பதில் கடிதம் அனுப்பியிருந்தார்.


அன்புள்ள வம்சினி சிவகுமாருக்கு,

உங்கள் வாழ்த்துக் கடிதம் கிடைத்தது. மிகவும் மகிழ்ச்சி. நீங்கள் நன்கு கல்விகற்றுப் பட்டங்கள் பல பெற்றுச் சீருஞ்சிறுப்புமாக பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரப் பெருமானை வாழ்த்தி வணங்குகிறேன்.

வாழ்க வளர்க

இப்படிக்கு க.வைத்தீசுவரக்குருக்கள்

இக்கடிதத்தின் மூலம் ஐயாவின் சிறு குழந்தைகளையும் மதித்து நடக்கும் அவரது உயர்ந்த பண்பாடு நன்கு தெரிகிறது.



அரசாங்க அதிபர் திரு கணேஸ் ஐயாவுக்கு விருது வழங்கியபோது



94 ஆவது பிறந்த நாளில் மணிவாசகர் சபையினருடன்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழாவிற்கு
அழைத்துவரப்படும் காட்சி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டமளிப்பின்
போது பேராசிரியர்களுடன்




94 ஆவது பிறந்தநாளில் தனது இரு மகள்மாருடன்



வைத்தீசுவரக்குருக்கள் சாரதாம்பிகை தம்பதிகள்



ஐயா அவர்கள் குடும்பத்தினருடன்



மருமகன் சிற்பி சரவணபவனுடன்



புத்தகங்களுடன் ஐயா



விசுவலிங்கம் தம்பதிகளுடன்

# நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

**எமது குடும்பத் தலைவரின் பிரிவின்போது**

பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், தொலைப்பேசி வழியாக இரங்கல் தெரிவித்த அன்பர்கள் இரங்கல் பிரசுரம் வெளியிட்ட அன்பர்கள் அமைப்புக்கள், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்திய அன்பர்கள் அமைப்புக்கள், பல்வேறு அமைப்புக்கள் சார்பாகவும் தமது சார்பாகவும் இரங்கல் உரை நிகழ்த்திய அன்பர்கள், பல்வேறு வழிகளிலும் உதவிய காரைநகர், கந்தரோடை பெருமக்கள்,பல்வேறு வழிகளிலும் தனது அன்பையும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கிய நல் உள்ளங்கள், அமரரின் பூதவுடலுக்கு காரைநகரில் வைத்து மக்கள் அஞ்சலி செலுத்த வசதி செய்ய வேண்டும் என்ற தமது கோரிக்கையை, கால நேர சூழ்நிலை காரணமாக நிறைவேற்ற முடியாத ஒரு கையறு நிலையில் நாம் இருப்பதை மிகவும் தெளிவாகப் புரிந்துகொண்டு தங்களின் நியாயமான அன்புக் கோரிக்கையை தளர்த்தி இறுதிக்கிரியைகளின் போது எமது தோளோடு தோள் நின்று எமக்கு பக்க பலமாக பல்வேறு வழிகளிலும் தமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி இறுதி நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற உதவிய காரைநகர் வாழ் பெருமக்கள் அனைவருக்கும் இந்நூலைச் சிறப்பாக அமைக்க ஆலோசனைகளை வழங்கிய அமரரின் மருமகனும் எமது மைத்துனருமாகிய எமது பெருமதிப்புகுரிய பிரம்மஸ்ரீ சி.சிவசரவணபவன் (சிற்பி) அவர்கட்கும், இம்மலரை ஓரிரு நாட்களில் சிறப்பாக வடிவமைத்து அச்சேற்றி உதவிய தேவி அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்

குடும்பத்தினர்.

தேவி Printers, Jaffna
021 300 3030